1440

7.] 1928ஞு நவம்பர்மீ 1உ [பகுதி 10.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



13 DEC 1928
MADRAS

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" என்ற நாவல்கள் பூர்த்தியாகி இப்போது "இராஜாமணி அல்லது, ஓர் அபூர்வ மர்மம்" என்றநாவல் வெளியாய் வந்து இம்மாதத்தோடு முடிவுபெற்று இச்சஞ்சிகையின் ஈற்றில் "இரத்தினரூபாய் அல்லது, இரகசிய சங்கம்" என்ற நாவல் தொடங்கப் பெற்றிருக்கிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0

அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0

அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0

கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0

கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3 4 0

இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2 0 0

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

13 DEC 1928 MADRAS

இதற்கிடையில் கிருஷ்ணராவும் ஜெகநாதனும் இரத்னா பாய் காணமற்போன விவகாரத்திற் சம்பந்தப்பட்ட ஆசாமிகளைப்பற்றித் தங்களால் கூடிய வரையில் சங்கதி களைச் சேகரம் செய்ய வேலை செய்தார்கள். இவர்கள் எதிர்பார்க்காத விடங்களிலெல்லாம் துர்க்கையன், அவன் வலது கையாகிய மதுரை நாயகம் இவர்களுடைய செல்வாக்கு அதிகமாக விருப்பதா யறிந்தார்கள். மற்ற விஷயங்களை யெல்லாம் பற்றிப்பேசும் ஆசாமிகள் அவர் களைப்பற்றிய விஷயமெனின் அச்சப்பட்டு அடியோடு பேச மறுத்து விடுகிறார்கள். அவர்கள் இருவர் விஷயத்தி லும் சாதாரண ஜனங்களுக்கு அத்தகைய பீதியுண்டாகி யிருக்கிறது.

கடைசியில் இவர்கள் இருவரும் அன்று தாங்கள் செய்த வேலைகளைப்பற்றி ஒப்பிட்டு ஆலோசிக்க மாலை நெடுநேரத்திற்குப் பின் கருணாகரம் பிள்ளையின் காரியா லயத்தில் சந்தித்தார்கள். துரைத்தன வக்கீலாகிய கருணா கரம் பிள்ளை மிக்க விசுவாசத்தோடு அவர்களை வரவேற் றார். அவர் தமது நாற்காலியில் உட்கார்ந்ததும் “இத் தினம் எனக்கு மிக்க கஷ்டமான தினமாகவே யிருந்தது. ஆயினும் நான் ஜெய மடைந்தேன்” என்றார்.

கிருஷ்ணராவ் “தாங்கள் எவ்வாறு ஜெய மடைந்தீர் கள்?” என்றான்.

கருணாகரம் பிள்ளை:—“அச்சங்கதி யென்னமோ இன்னும் பத்திரிகைகளுக்கு எட்டவில்லை. ஆனல் மந்திரா லோசனைச் சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக் கும் விஷயத்தில் நடக்கும் சூது முதலியவைகளைப் பற்றி விசாரிப்பதில் ஏற்படுத்தப்பட்ட ஜூரர்கள் இந்த ஜட்காசுப்பன் மேல் ஒரு குற்றம் இருப்பதா



186530.

கவே கூறினர்கள். மேலதிகாரிகள் அதை யங்கீகரிக்காவிடினும் அவன்மேல் கொண்டு வரக்கூடிய வேறு குற்றங்களிருக்கின்றன” என்றார்.

அச்சமயம் கருணாகரம் பிள்ளையின் காரியாலயத்திலிருக்கும் டெலிபோன் மணி கணகணவென் றடித்தது. அவர் சென்று பேசிவிட்டு நான் கைந்து நிமிடங்களில் திரும்பிவந்து “இப்போது பேசியவன் என் காரியஸ்தர்களில் மிக்க புத்திசாதுரிய முடைய ஒருவன். இப்போது நான் கூறிய குற்றச்சாட்டு சீக்கிரத்திலேயே பிரேமநாதர் என்ற நியாயாதிபதியால் தலைமை நீதிச்சபையில் விசாரிக்கப்படும். அவர் நமக்கு மிக்க வேண்டியவர். எல்லா விஷயங்களும் நமக்குச் சாதகமான வழியிலேயே நடைபெறுகின்றன” என்றார்.

மறுநிமிடம் கதவு திறக்கப்பட்டதும் வேலையாள் வந்து மதுரைநாயகம் பிள்ளை என்றான். அவன் கூறி வாய் மூடுமுன் மதுரைநாயகம்பிள்ளை யென்ற ஆளே-துர்க்கையன் காரியஸ்தன்—உள்ளே வந்ததும், ஹோ கருணாகரம் பிள்ளையவாள்! என்றான். சமயத்தை யனுசரித்துக் கருணாகரம் பிள்ளையும் முகம் சுளிக்காமலே “ஆ! மதுரைநாயகம்பிள்ளை! வாரும்” என்றார். மதுரைநாயகம் பிள்ளை சில வருடங்களாக எதிர்க்கட்சியில் சேர்ந்தவனுதலால் கருணாகரம் பிள்ளையிடம் வருவதேயில்லை. ஆகையால் அவர் “இது—இது அதிசயமே! ஆயினும் உம்மைச் சந்தித்தது சந்தோஷமே. உட்காரமாட்டீரா. ஆ! இதோ....கிருஷ்ணராவ். அவருடைய நண்பர் ஜெகநாதம்பிள்ளை. தங்களுக்கு என்னு லாகவேண்டிய வேலை யேதேனு முண்டோ?” என்றார்.

மதுரை நாயகம்பிள்ளை கிருஷ்ணராவிடமும் ஜெகநாதம்பிள்ளை யிடமும் கைகுலுக்கி விட்டு உட்காராமல்

ஆவணக் காப்பக
சென்னை-600 008

நின்றுகொண்டே யிருந்தான். பிறகு கருணாகரம் பிள்ளையை நோக்கி "இதென்ன நான் கேள்விப்படுவது ? நீர் சுப்பராயனைச் சிறைப்படுத்தி அவன்மேல் குற்றச்சாட்டு ஸ்தாபித் திருக்கிறீராமே?" என்றான்.

"சுப்பராயன் என்பவன்றான் ஜட்காசுப்பன் என்பவன். கள்ளர் கூட்டத்தில் அவனுக்கு அந்தப்பெயர் உண்டாயிற்று. அவன் தங்கள் கட்சிக்கு உதவியா யிருப்பவனாதலின் மதுரைநாயகம்பிள்ளை சுப்பராயன் என்ற பெயரைக் கூறினான்.

கருணாகரம் பிள்ளை:—"உமக்குக் கூறப்பட்ட துண்மையே. ஜட்காசுப்பன்மேல் ஜூரர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். விசாரணை—" என்பதற்குள்.

மதுரைநாயகம் பிள்ளை வெறுப்போடு "ஜட்காசுப்பன்! பேஷ். இப்போது அப்படித்தான் காரியங்கள் நடக்கின்றன. ஒருநாயைத் தூக்கிற்போட விரும்பினால் முன்னே அதற்கொரு கெட்டபெயரை வைத்துவிடவேண்டும். ஏன், இப்பெயர் அவன் ஆயுள்வரை யவனைவிடாது பற்றிக் கொண் டிருக்குமென்றே நான் நினைக்கிறேன். இது சரியல்ல. கருணாகரம்பிள்ளை! இப்போது அவன் சண்டையிட்டான் என்று அவன்மேல் குற்றம் சாட்டிவிட்டால், துரைத்தன வக்கீலாகிய நீர் அவன் தண்டனை யடைவதற்குச் செய்யவேண்டிய தெல்லாங்கூடி "ஓ ஜூரர்களே! உங்கள் எதிரில் நிற்கும் குற்றவாளி பிரசித்திபெற்ற சூதாடியாகிய ஜட்காசுப்பனே" என்பதே. ஜூரர்கள் அதற்குமேல் ஒன்றுமே கேட்காமல் "இவன் குற்றவாளியே" என்று கூறிவிடுவார்கள். இச்சங்கதி எனக்குத் தெரிந்ததுபோல் உமக்கும் தெரிந்ததே. முடிவுவரையில் அவன் கதி யவ்வளவே." என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"இத்தகை மிருதுவார்த்தைகளையெல்

லாம் நான் நம்புகிற ஆசாமி என்று நீர் கருதுகிறீர்? இல்லையில்லை. நான் இவன்மேல் கண்வைத்துக் கவனித்து வந்திருக்கிறேன். இப்போது அவனுக்கு இருபத்தெட்டு வயதாகிறது. அவனுடைய மரியாதையான தந்தையைப் பற்றியும், விசனத்தோடிருக்கும் தாயைப்பற்றியும், அழும் சகோதரியைப் பற்றியும் கதையொன்றும் கூறவேண்டாம். நான் இத்தொழிலில் கிழவனாய் விட்டேன். இதனாலெல்லாம் மயங்கி விடமாட்டேன். இப்பேச்சை நிறுத்திவிட்டு வேறு நமது சங்கதி ஏதேனு மிருந்தால் பேசுவோம்" என்றார்.

மதுரைநாயகம் பிள்ளைக்கு ஜட்காசுப்பன் பெரிய உதவியாதலின் அவனைக் காப்பாற்ற வேண்டு மென்பது அவன் எண்ணம். அதோடு துர்க்கையனுக்காக இங்கு என்ன நடக்கிறது, கருணாகரம் பிள்ளையின் விவகாரம் என்ன நிலைமையி லிருக்கிறது என்பவைகளை வேவுபார்க்க வேண்டியே அவன் இப்போது வந்தான். இச்சமயம், தான் கருணாகரம் பிள்ளையின் தயவைக் கோருபவன்போல் நடிக்க வேண்டியிருப்பது அவன் மனதிற்கு மிக்க கஷ்டமாயிருந்தது. கிருஷ்ணராவும் ஜெகநாதனும் போய்விட வேண்டுமென்பது அவன் எண்ணம். அவன் பார்வையால் அது நன்கு விளங்கியது. ஆனால் கருணாகரம்பிள்ளை அவர்களை வேறிடத்திற்குச் சென்றிருக்கும்படி கூறவில்லை.

கடைசியில் மதுரை நாயகம்பிள்ளை "கருணாகரம் பிள்ளை! நாம் இவ்விஷயத்தில் ஒருவழியாய்ச் சமாதானம் செய்து கொள்ளலாகாதா? தாங்கள் சுப்பராயனைப் பராமுகமாய் விட்டுவிடுங்கள். பதிலுக்கு நான் என்சிநேகரில் சிலரைத் தங்கள் விஷயத்தில் போட்டிக்குவராமல் நடந்து கொள்ளும்படி செய்கிறேன்" என்றான். அவன் கருத்

தாவது மந்திராலோசனைச் சபைக்கு அவயவிகளைத் தெரிந்தெடுக்கும்போது உமக்குப் போட்டியாய் வேலைசெய்வதை நிறுத்தும்படி செய்வேன் என்பதே.

கருணாகரம் பிள்ளை சிந்தித்தார். மதுரைநாயம்பிளளை "ஆலோசித்துப் பிறகுகூறுகிறீரா?" என்றான். வேறொருவனாக விருந்தால் சம்மதித்தே யிருப்பான். இப்போது கருணாகரம்பிள்ளை யப்படிச் செய்வாராயின் பிறகு அழகாம்பாள் முகத்தில் எவ்வாறு விழிப்பார். ஆகையால் அவர் "நான் சிந்திக்கவேண்டிய வேலையேயில்லை. சிந்திக்கவுமாட்டேன். மதுரைநாயகம்பிள்ளை ! நாம், எனக்குத் தெரிந்தவரையில் நியாயமான வழியாய் ஒழுங்கின்படி தெரிந்தெடுக்கப்படப் போகிறோம். நான்தோல்வியடைவதாயின் பழைய சூது வழிகளாலேயே தோல்வி யடையவேண்டும். நான் ஜெயமடைந்தால் கௌரவமான வழியாகவே ஜெயமடைவேன்" என்றார்.

அதன்மேல் மதுரைநாயகம்பிள்ளை தன் சாமார்த்தியமனைத்தும் காட்டிப் பார்த்தான். கருணாகரம் பிள்ளையை நோக்கி "நீர் அவன்மேல் என்ன குற்றம் சாட்டினாலும் எதையும் ருசுப்படுத்த முடியாது. அவனுடைய வக்கீல்களுக்குத் தாங்கள் இன்னது செய்யவேண்டுமென்பதும், நீர் என்ன செய்கிறீர் என்பதும் நன்றாய்த் தெரியும். கடைசியில் நீர் ஒன்றும் செய்யமுடியாது. வீண் தொந்திரைகளை யுண்டாக்கலாகும் என்பதற்காக நான் கூற வந்தேனேயன்றி ஏதோ பயந்து போய் உம்மை வேண்டிக்கொள்ளவில்லை. அவ்வெண்ணத்துடன் வந்ததாகக் கருதவேண்டாம். அதற்கு மாறாக எங்கள் கட்சியின் ஏற்பாடுகளும், நடவடிக்கைகளும் நீர் பிறப்பதற்கு முன்னிருந்தே நிலைத்து வருகின்றன. உமது நவீன சீர்திருத்தச் சங்கம் எங்களை யொன்றும் அசைக்காது. இதோ

உமது நண்பர்கள் முன்பாகவே நான் கூறுகிறேன். நீர் துரைத்தன வக்கீல் பதவியிலிருப்பது எங்களுக்கு விருப்ப மில்லை. நாங்கள் எங்களாலானதைச் செய்தே தீருவோம். நீர் இவனை விட்டு விட்டால் மற்ற விஷயங்கள் இயற்கை வழியே நடைபெற விட்டுவிடுவோம். விசாரணையில் போலீ ஸாரும், துரைத்த வக்கீலும் வேணுமென்றே அவனுக்குத் துன்பம் விளைக்கக் கருதுகிறார்கள் என்று நாங்கள் நிரூபிப் பதை யெந்த நியாயாதிபதியும் கவனிக்காமற் போகான்'' என்றான்.

கருணாகரம்பிள்ளை :—"ஆகா! நீங்கள் தாராளமாய் நியா யாதிபதியின் முன் கூறலாம். இக்குற்றத்தைப் பிரேம நாதர் தான் விசாரிக்கப் போகிறார்'' என்றார்.

பிரேமநாதர் என்ற பெயரைக் கேட்டதே மதுரை நாயத்தின் கோபமும் தீரமும் ஒடுங்கிப்போயின. ஏனெ னில் அவர் இவர்கள் கூட்டத்தை யடியோடு வெறுப்பவர். அதனால் அவன் சற்றுநேரம் ஒன்றும் பேச முடியாமல் விழித்துக் கடைசியில் பிகுவிடாமல், கருணாகரம் பிரபுவின் கட்சியைச் சேர்ந்த ஆட்களில் சிலர் செய்யும் அக்கிரமங்க ளெல்லாம் தங்களுக்குத் தெரியுமாதலால் கருணாகரம் பிள்ளை இப்போது ஜட்கா சுப்பனை விடாவிட்டால் அவர் கட்சியாட்களுக்குத் துன்பம் செய்யத் தன்னாலாகுமென்று பயமுறுத்துவதுபோல் குறிப்பாய்க் கூறினான்.

அவன் என்ன கூறியும் கடைசியில் கருணாகரம்பிள்ளை "மதுரைநாயகம்பிள்ளை! நான் இதைப்பற்றிச் சிந்திக்கவே மாட்டேன். என் தீர்மானத்திலிருந்து ஒரு அங்குலங்கூடப் பின்னிடைய மாட்டேன். அடுத்த விசாரணையில் ஜட்கா சுப்பன் விசாரிக்கப்படுவது நிச்சயம்'' என்றார்.

அவர் அவ்வாறு கூறியதைக் கேட்டதே மதுரை நாயகம் கோபத்தால் தன்னை மறந்து ஆத்திரமடைந்து,

"கருணாகரம்பிள்ளை! அப்படியாயின் இதற்காகப் பின்னால் மனஸ்தாபப்படுவீர்" என்று கூறிக்கொண்டே கதவை நோக்கிச் சென்றான்.

கருணாகரம்பிள்ளை சட்டென்று "அப்படி நேரிடா தென்றே நம்புகிறேன். உங்களால் ஆனதை நீங்கள் செய்ய லாம்" என்றார். மதுரைநாயகம் பிள்ளை வாயாற் பதிலளிக் காமல் கதவைத் தடாலென்று மூடிக்கொண்டு சென்றான்.

---

## 9—வது அத்தியாயம்.

மதுரைநாயகம் பிள்ளை சென்றதும் கருணாகரம் பிள்ளை கிருஷ்ணராவை நோக்கி "கடைசியில், இலக்ஷ்மணசாமியின் பெட்டியிலிருந்த கறுப்புப் புத்த கத்தை ஜட்காசுப்பனே களவாடியிருப்பினும் அது தூர்க் கையனிடம் சிக்கவில்லையென்றே கருதுகிறேன்" என்று கூறினார்.

கிருஷ்ணராவ்:—"நடந்த விஷயத்தை நோக்க அவன் யுத்த விளம்பரம் செய்துவிட்டுச் சென்றதாகவே நினைக்கிறேன்" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—அப்படித்தான் நானும் நினைக்கி றேன். அதனால் நான் விசனப்படவில்லை.

கிருஷ்ணராவ்:—"நானும் விசனப்படவில்லை. ஆனால் இத னால் ஒரு விஷயம் முடிவிற்கு வந்து விட்டது. அதா வது இனி நாம் வெளிப்படையாகவே அவர்களுக்கு விரோதமாய் வேலை செய்யலாம். அவர்களே வலிய அதை நம்மேற் சுமத்தினார்கள். அவர்கள் எப்படி வேலை செய்வதாயினும் நாம் துரிதமாய் வேலை செய்ய ஆயத்தமாய் விடவேண்டும். நாம் அவர்களுக்கு முன் மிஞ்சிக்கொள்ளவேண்டும்" என்றான்.

மூவரும் சற்றுநேரம் ஆலோசித்தபின் நகரத்தின் மேல் பாகத்திலுள்ள ஒரு ஹோட்டலுக்குச்சென்று போசனம் செய்து கொண்டே மேல் நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றிப் பேசுவதென்று தீர்மானித்தார்கள். அச்சமயம் வாயில் காப்போன் வந்து, இன்னொருவர் வந்து கருணா கரம்பிள்ளையைக் காண விரும்புவதாகக் கூறினன். அவர் அந்த ஆளை யுள்ளே விடும்படி கூறினர்.

இப்போது வந்த மனிதன் மதுரை நாயகம் பிள்ளை யின் நடைபாவனைகளுக்கு மாருன நடைபாவனை யுடைய வன். மிகுந்த அடக்கத்தோடு உள்ளே வந்தான். அவன் நடுத்தரமான உயரமும், மேடான நெற்றியும் தீக்ஷண்ய மான பார்வையும், சுயநம்பிக்கை யுடையவன் போன்ற நோக்கமும் உடையவன்.

அவன் யாவர்க்கும் வந்தனமளித்து விட்டுக் கருணா கரம்பிள்ளையை நோக்கி "என் பெயர் கனகசபை. நானொரு வக்கீல்" என்ருன். கருணாகரம்பிள்ளை "சரி தெரிந்து கொண்டேன்" என்று கூறுபவர்போல் தலையசைத்தார்.

ஜகநாதம்பிள்ளை, அவனை முன் ஒருபோதும் கண்ட தில்லையேனும் கண்ணம்மாள் அவனைப்பற்றிக் கூறியது அவன் நினைவிலிருந்தது. கனகசபை யென்பவன் முதலில் மோட்டார் வண்டிகளில் பிரயாணச் சீட்டுக் கொடுப்பவ னகவிருந்து, பிறகு வண்டிகளைச் சோதிக்கும் வேலையி லமர்ந்து படிப்படியாய் ஏறிக் குற்ற விசாரணை செய்யும் நீதிச் சபையில் ஒரு வக்கிலானன். ஆகையால் யுக்தி, தந் திரம், சூது முதலியவற்றில் தேர்ந்தவர்களாகிய வக்கீல் களில் ஒருவனுகக் கருதப்படுபவனும் தந்திரமாய்க் கட்சிக்காரரிடம் பொருள் பறிப்பவனுமாய்விட்டான்.

கருணாகரம்பிள்ளை அவனை யறிவார். நீதிச்சபைகளில் வேலை நடந்து கொண்டிருக்கும் விவகாரமாக அங்கு வரும்

ஆட்களைத் தந்திரமாய்ப் பிடித்துப் போய் வக்கீலிடம் விட்டுப் பொருள் பறிக்கும் ஆட்கள் பலர் நீதிச் சபையின் வெளித்தாழ்வாரங்கள் முற்றங்கள் முதலிய விடங்களில் திரிந்துகொண்டு யார் அகப்படுவார்களென்று கண்ணோக்கமாயிருப்பார்கள். அவர்களுடைய முகங்கள் அவர்களின் உண்மைக் குணத்தை வெளியிடும். ஆனால் அவர்கள் மேலுக்கு நாணயமாக உடுத்திக்கொண் டிருப்பார்கள். கனகசபை அத்தகைய ஒரு கூட்டத்தின் தலைவன்.

கனகசபை மிக்க மரியாதையாகப் பேசத் தொடங்கி, "கருணாகரம்பிள்ளையவாள்! தங்கள் அரிய காலத்தினிடையில் நான் குறுக்கே வந்ததற்கு மன்னிக்க வேண்டுகிறேன். என் கட்சிக்காரனாகிய சுப்பராயன் விஷயமாகப் பேச வேண்டி அவ்வாறு செய்ய நேர்ந்தது" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—"ஹோ! உன்னை யவனுக்காக அவர்கள் அமர்த்தினார்களோ-உம்-அப்படியா?" என்றார்.

கனகசபைப் பிள்ளை:—"ஆம். என்னைத்தான் அவர்கள் அமர்த்தினார்கள். நான் இப்போதுதான் சிறைச்சாலைக்குச் சென்று கைதியைக்கண்டு பேசி, அவன் விவகாரங்களைப்பற்றி மிக்க ஜாக்கிரதையோடு கவனித்துப் பார்த்தேன்." என்றான்.

கருணாகரம் பிள்ளை:—சரிதான் என்று தலையசைத்துவிட்டு அவனே கூறட்டுமென்று பேசாமலிருந்தார்.

கனகசபைப் பிள்ளை பக்குவமாகக் கூறிக் கொண்டே போய் "நான் குற்றவாளியை விசாரித்ததில் அது அவ்வளவாகக் கெட்ட குற்றமாய்ப் புலப்படவில்லை. பாருங்கள்! ஒருவன் குற்றம் செய்தான் என்று ஒருவர் தனக்குள் சுலபமாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். ஆனால் நியாயாதிபதியின் முன்னிலையில் அக்குற்றத்தை நிரூபிப்பது மிக்கக் கஷ்டமென்பது தங்களுக்குத் தெரியாததல்ல-அதி

லும் விசாரணையில் ஆலசியத்திற்கு எவ்வளவோ காரணங்கள் நேரிடும்...'' என்றதே,

**கருணாகரம்** பிள்ளை:—''இவற்றையெல்லாம் நீ எனக்குக் கூறவேண்டிய அவசிய மில்லையே'' என்றார்.

**கனகசபைப்** பிள்ளை:—'' அது உண்மையே. ஒரு விஷயம் கூறுவதற்காக இதை முன்னுரையாக நான் கூறினேன். அதாவது இதையொருவிதமாகச் சமாதானப் படுத்திக் கொள்ளலாம். வீண் உழைப்பும் காலமும் செலவாகிக் கடைசியில் தாங்கள் தோல்வி யடைவதைக் காட்டிலும் ஜனங்களுக்கும் திருப்தி யுண்டாகும் வண்ணம் நாம் இருவரும் சமாதானமாவது ஜெயமடைந்த மாதிரியாகும்'' என்றான்.

கருணாகரம் பிள்ளை மெதுவாகவே ஆனால் உறுதியாக ''அய்யா! சமாதான மென்பதே இதில் கிடையாது'' என்றார்.

கனகசபை யவரை யுற்றுநோக்கினான். கருணாகரம் பிள்ளை மறுபடி யவனை நோக்கி ''ஒன்றும் முடியாது. மதுரைநாயகம் பிள்ளை முந்தியே யிங்குவந்து என்னிடம் பேசிவிட்டு என் தீர்மானத்தை யறிந்துகொண்டு சிறிது நேரத்திற்கு முன்புதான் சென்றார். அவர் நேராய் உங்கள் காரியாலயத்திற்கு வந்திருப்பார். உனக்கும் சங்கதி தெரிந்திருக்கும். இச்சங்கதி மிக்கதூரம் போய்விட்டது. இதில் இன்னும் அநேக விஷயங்கள் இருக்கின்றன. நான் என் தீர்மானத்திலிருந்து ஒரு இம்மியளவுகூட நகரமுடியாது.'' என்றார்.

கனகசபைப் பிள்ளை எவ்வளவோ தந்திரமாகப் பேசிப்பார்த்தான். அவர் சற்றும் பின்னிடைய வில்லை. கடைசியில் ''அப்படியானால் யுத்தமே?'' என்றான். கருணா

கரம் பிள்ளை "ஆம். இடங்கொடாது முடிவுவரை யுத்தமே." என்றார்.

அதன்மேல் கனகசபைப் பிள்ளை ஒரு கள்ளன்போல் மெதுவாய் நடந்து சென்றான். அவன் நடக்கை மதுரை நாயகம் பிள்ளையின் நடக்கைக்கு முற்றும் மாறாகவிருந்தது.

ஜெகநாதன் இத்தகைய ஆள் பயங்கரமான விரோதி யென்று கருதி மனச்சோர்வடைந்தான். ஆனால் கிருஷ்ணராவும் கருணாகரம் பிள்ளையும் பின்னும் உற்சாகமே யடைந்தார்கள். எதிரியின் விஷயங்களை வெளியிடும் ஒவ்வொரு விவகாரமும் அவர்கள் மனதிற்குச் சந்தோஷத்தையும் உற்சாகத்தையு மளித்தது. அவர்களிருவருடைய ஆலோசனையும் சரியாகவே யிருக்கும் என்று ஜெகநாதனுக்குத் தெரியுமாதலால் அவன் மனம் நிம்மதியடைந்தது.

கருணாகரம் பிள்ளை பேசாமல் தன் மேஜையை மூடிப்பூட்டினார். பிறகு அவர்கள் எங்குப்போய் போஜனம் செய்வதென்று ஆலோசிக்கலானார்கள். கடைசியில் நகரில் மேல்பக்க மிருக்கும் ஒரு நிம்மதியான ஹோட்டலுக்குச் செல்வதென்று தீர்மானித்தார்கள். போகும் இடத்தைக் காரியாலயத்திலுள்ள ஆளிடம் கூறிச் சென்றார்கள்.

அங்குச் சென்றும் அவர்கள் நிம்மதியாய் விடப்படவில்லை. ஏனெனில் அவர்கள் போஜனம் முடியுமுன்பே ஹோட்டல் வேலைக்காரன் ஒருவன்வந்து இவர்கள் போஜனம் செய்யும் மேஜை யெதிரில் நின்று "கருணாகரம் பிள்ளையவாள்?" என்றான். அவர் தமது கையால் தாமே என்பதைக் குறிப்பிட்டு அருகில் வா என்று அவனுக்குச் சமிக்கை செய்தார். அவன் கிட்டவந்து "ஐயா! தங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார்கள்" என்றான்.

கருணாகரம் பிள்ளை தன் நண்பரை நோக்கி, "சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு எழுந்து போய்ச் சற்றுநேரங் கழித்துவந்து "என் ஆட்களில் ஒரு வன் எனக்காக எதிரிகளை வேவு பார்க்கச் சென்றிருந் தான். மதுரை நாயகனும், இந்தக் கனகசபையும் என் னிடம் தங்கள் காரியம் பலிக்காமற்போகவே நடக்கப் போகும் விசாரணைக்கு யார் ஜூரர்கள் என்பதை யறிந்துகொண்டு அவர்களுக்கு இலஞ்சம் கொடுத்துக் காரி யத்தை அனுகூலம் செய்ய முயல்கிறார்கள் என்பது அவ னால் தெரிகிறது. அந்த ஜூரர்களை வேறு விவகாரத்திற்கு அமர்த்திவிட்டு இந்த விசாரணைக்குப் புது ஆட்களை ஏற் படுத்துவது மிக்க சுலபமான காரியமே" என்றார்.

கிருஷ்ணராவ் "இதை யிப்படியே விடுவதுதான் நலம். ஏனெனில் இந்தக் கனகசபையைக் கையும் பிடியுமா கப் பிடிக்கலாகும். ஜூரர்களுக்கு இலஞ்சம் கொடுத்துச் சரிப்படுத்த முயன்றானென்று ருசுப்படுத்தி விடலாம். இவன் முன்னமே சாக்ஷிகளைச் சரிப்படுத்தி விசாரணையை யாலசியம் செய்யலாமென்று கூடப் பயமுறுத்தி யிருக்கி றான்" என்றான்.

கருணாகரம் பிள்ளை யவன் மொழிகளைக் கேட்டதே "ஆ! இது மிக்க நேர்த்தியான வேலையே. இத்தகைய ஆசாமியைப் பிடித்துக் கொடுத்தால் இந்த விஷயத்தில் நமக்கு அனுகூலம் நேர்வதோடு பொதுவாகவே மிக்க நன்மை யுண்டாகும்" என்றார்.

கிருஷ்ணராவ்:—"நமக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத் தால் அந்தக் கனகசபையைக் கட்டாயம் பிடித்து விடுவோம். உமக்கு அவனுடைய விவகாரங்கள் சுமா ராகத் தெரியுமென்று நான் நம்புகிறேன். இவன் தன் இரகசிய காரியங்களைப்பற்றி யாலோசனை செய்ய எங்

குச் செல்கிறான்? ஏனெனில் இத்தகைய ஆசாமிகள் தங்கள் இரகசியச் செயல்களைப்பற்றி யாலோசிக்க வேறு இடம் வைத்துக்கொண் டிருப்பார்கள்'' என்றான்.

கருண:—"ஏன். அவன் பரசுராம் ஹோட்டலுக்குத்தான் செல்கின்றான். அங்கு அவனுக்கு ஏதோ காரியமிருக்கிறதென்று தெரிகிறது.'' என்றார்.

பரசுராம் ஹோட்டல் இரவு முழுதும் திறக்கப்பட்டிருப்பதென்று கிருஷ்ணராவுக்கும் ஜெகநாதனுக்கும் தெரியும். அவர்கள் போஜனம் முடிவதற்குள் கிருஷ்ணராவ் பல யோசனைகளைச் சிந்தித்தான். கடைசியில், "நாம் உடனே செய்யக்கூடியது ஒன்றுமில்லை யென்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் இருவரும் என்கூட என் இரசாயன சாலைக்கு வந்தால் நான் தக்கமாதிரி யுத்தத்திற்கு ஆயத்தப்படும் வழியைக் காட்டக்கூடும். என்னிடம் ஒருவித எந்திரம் இருக்கிறது. அது இச் சந்தர்ப்பத்திற்குச் சரிப்படும் பட்சத்தில் இந்தக் கனகசபை ஜாேர்களை வசப்படுத்துவது முடிவிற்கு வந்துவிடும்.'' என்றான்.

சற்றுநேரங் கழித்து மூவரும் கிருஷ்ணராவின் இரசாயன சாலையில்போய் உட்கார்ந்தார்கள். கிருஷ்ணராவிடம் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் எந்திரங்கள் - சாஸ்திர யுக்தமாய்க் கண்டு பிடிக்கப்பட்டவை - பல விருக்கின்றன. கிருஷ்ணராவ் தன் அலமரியைத் திறந்து பலவிதமான கருவிகளை யெடுத்து மேஜைமேல் வைத்தான். அவற்றில் சில ஜெகநாதனுக்கு இன்னவையெனத் தெரியும். சில அவனுக்கே வியப்பாகத் தோன்றின.

கிருஷ்ணராவ் அவற்றிலிருந்து சிலவற்றையெடுத்து ஒருபுறம் வைத்தான். அவற்றில் சுருணையான கம்பிகளும், மின்சார சக்தியை யுண்டாக்கும் சிறு எந்திரமும், புகைப்

படம் பிடிப்பதுபோன்ற கண்ணுடிக் குழாயுடைய ஒரு சிறு பெட்டியுமிருந்தன. கருணுகரம் பிள்ளை யாவற்றை யும் மிக்க வியப்போடு பாத்துக்கொண்டே யிருந்தார்.

கிருஷ்ணுராவ் தான் உத்தேசித்த காரியத்திற்கு வேண்டியவற்றைச் சேகரம் செய்து ஒரு பையில் வைத்துக் கொண்டு கருணுகரரை நோக்கி "இனி நாம் பரசுராம் ஹோட்டலுக்குச் செல்ல வேண்டியதே" என்ருன்.

சற்று நேரத்திற்குள் இவர்கள் மூவரும் பரசுராம் ஹோட்டலுக்குப் புறப்பட்டுச் சென்ருர்கள். கிருஷ்ணுராவ் தன் கருவிகளிருக்கும் பையைத் தோளின்மேல் தொங்கவிட்டுக் கொண்டான். இவர்கள் மிக்க எச்சரிக்கையாக ஹோட்டலுக்குள் சென்ருர்கள். அந்த ஹோட்டலின் பின் பாகத்தில் சில தனியறைகள் இருந்தன. அவைகள் சாதாரணமாய் சட்ட விரோதமின்றிய பகிரங்க விடங்களாகவே தோற்றப்படினும் அவற்றிலும் இரண்டொரு இரகசியமான அறைகளிருந்தன. இங்கெல்லாம் கனக சபைப் பிள்ளை காணப்படவில்லை. கிருஷ்ணுராவ் அந்த அறைகளின் பின்பக்கம் என்ன இருக்கிறது என்று கருணுகரம் பிள்ளையைக் கேட்டான். அவர் அங்கு ஒரு அறை யிருக்கிறது என்ருர்.

கிருஷ்ணுராவ் ஜெகநாதனை நோக்கி "நண்பனே! அவன் அங்குத்தான் பெரும்பாலு மிருப்பான். உன் முகம் அவனுக்குத் தெரியாது. நீ சென்று மெதுவாய்ப் பார்த்து வா" என்ருன். ஜகநாதன் அவ்வாறே சென்று பின் பக்கமுள்ள அறையின் முன் இருந்த விளம்பரங்களை வாசிப்பவன்போல் அபிநயம் செய்துகொண்டு சற்றுநேரம் தாமதித்தான். ஏனெனில் ஹோட்டல் ஆட்கள் அங்கு மிங்கும் திரிந்துகொண் டிருக்கிருர்கள். அந்த அறையில்

தீபம் எரிந்துகொண் டிருந்தாலும் அதன் இரட்டைக் கதவுகள் மூடப்பட்டிருந்தன.

ஜெகநாதன் யாருமில்லாத சமயம் பாத்து மெதுவாக இரண்டு கதவுகளையும் கொஞ்சம் நீக்கிச் சந்தில் தலையை விட்டுப் பார்த்தான். அங்கு ஒரே ஆள் ஒரு மேஜையின் முன் உட்கார்ந்து ஏதோ பானம் அருந்திக்கொண்டே பத்திரிகை யொன்றை வாசித்துக்கொண் டிருப்பதைக் கண்டான். அம்மனிதன் கதவு திறக்கப்பட்டதைக் கவனிக்கவில்லை. ஆனால் அவன் கனகசபையே யென்று ஜெகநாதன் தெரிந்து கொண்டான்.

அவன் கிருஷ்ணராவிடம் திரும்பி வந்து குசுகுசு வென்று "அவன் பின்பக்க அறையிலிருக்கிறான்" என்றான்.

இரண்டொரு விநாடிகள் கழித்துக் கிருஷ்ணராவ் ஜெகநாதனையும் கருணாகரம் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு கனகசபை யிருக்கும் அறைக்குக் கீழ் ஆனால் அதற்கு எதிரில் நேராகவுள்ள ஒரு அறைக்குச் சென்றான். இவர்கள் அங்குச் சேர்ந்ததே ஹோட்டல் வேலைக்காரரில் ஒருவன் இவர்களை விசாரிக்க வந்தான். கிருஷ்ணராவ் சட்டென்று அவனிடம் கொஞ்சம் பணமளித்து "நீ பேசாமலிரு. நாங்கள் ஒரு இரகசிய வேலையாக வந்திருக்கிறோம்" என்று கூறி அவனை வசப்படுத்திக் கொண்டான்.

இப்போது இவர்கள் இருக்குமிடத்தில் மேலறையிலிருக்கும் ஆள் இவர்களைக் காண முடியாது. கிருஷ்ணராவ் இவர்களை அந்த அறையின் ஒரு மூலையில் உட்காரவைத்து "இங்கேயே யிருங்கள்; பேசாமலிருங்கள்; சந்தடி செய்ய வேண்டாம்" என்று திட்டப்படுத்தி விட்டுத் தன் காரியத்தைச் செய்யத்தொடங்கினான். ஜெகநாதனும் கருணாகரம்பிள்ளையும் மிக்க வியப்போடும் ஆவலோடும் அவன்

செய்கைகளைக் கவனித்துக்கொண் டிருந்தார்கள். அவர்களிருவர்க்கும் அவன் சாமார்த்தியமாகவே யெதையும் செய்வான் என்ற நம்பிக்கை பூரணமாக உண்டு. ஆனல் இச்சமயம் அவன் செய்வது இன்னதென்று அவர்களுக்கு விளங்கவில்லை.

கிருஷ்ணராவ் யாரும் அவ்வழி வராத சமயம் பார்த்துத் தட்டென்று ஒரு மேஜை மேலேறி மேலிருக்கும் அறையைப் பார்த்துவிட்டு இந்த அறையில் அதற்கு நேராய் உயரத்திலிருந்த ஒரு பெரிய மாடத்தின் இருட்டான பாகத்தில் தன் பையிலிருந்த எந்திரத்தை யெடுத்து வைத்து விட்டான். அதிலிருந்து இரண்டு கம்பிகள் தொங்கின. ஆனல் அவைகளும் சாதாரணமாய்க் காண்போர் கண்களுக்குப் புலப்படா.

பிறகு கிருஷ்ணராவ் கருணைகரம் பிள்ளையையும், ஜெகநாதனையும் நோக்கி "அவன் இன்னும் அதே நிலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறன். அவன் யாருக்காகவோ காத்துக் கொண்டிருக்கிற னென்பது காண்கிறது" என்றன்.

ஜெகநாதன்:—"ஆம். நானும் அப்படியே கருதினேன்" என்றன்.

பேசாமல் யாவும் கேட்டுக் கொண்டிருந்த கருணைகரம்பிள்ளை "அவன் துரிதமாகவே வேலை செய்ய ஆரம்பித்து விட்டான் என்பது தெரிகிறது. நீ அங்கு வைத்த எந்திரம் என்ன? கள்ளடெலிபோனு?" என்றர்.

கிருஷ்ணராவ் புன்னகையோடு "அல்ல அல்ல. அவன் இங்கு அவ்வளவு வெளிப்படையாகப் பேசுவான் என்று நான் கருதவில்லை. இங்கே ஒன்றும் சம்பவியாமற் போனலும் போகலாம். ஆனல் அப்படிச் சம்பவித்தால் நாம் சரியான வேலை செய்தோம் என்ற திருப்தி நமக்

குண்டாகும். கருணாகரம் பிள்ளையவாள் தாங்கள் அதோ அந்த உள் மூலையில் உட்காருங்கள்; ஜெகநாதம்! நீ அந்த எதிர் மூலையிலுட்கார். நாம் இங்கு எவ்வளவு காலம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலிருக்கிறோமோ அவ்வளவும் நலமே" என்று கூறிக்கொண்டே எந்திரத்தையும் தொங்கும் கம்பிகளையும் சரியாக நிழலில் மறைத்தான்.

கருணாகரம்பிள்ளை மிகத் தாழ்ந்த குரலாய் "கொஞ்சக்காலமாக ஜூரர்களுக்கு இலஞ்சம் கொடுக்கும் வழக்கம் நடந்துகொண்டிருக்கிறதென்று வக்கீல்கள் என்னிடம் முறையிடுகிறார்கள். ஆனால் அது இன்னும் வெறும் வதந்தி மட்டுமாகவே இருக்கிறதன்றித் தக்க தகவலோடு அறியப்படவில்லை" என்றார்.

கிருஷ்ணராவ் வியப்போடு "அப்படியாயின் இந்த நகரிலேயே இது நடந்து வருகிறதென்று கூறுகிறீர்?" என்றான்.

**கருணாகரம்பிள்ளை**:—"ஆம். இதைக் கண்டுபிடிக்க நான் எடுத்துக்கொண்ட இம்முயற்சி ஆரம்பமே. இதை அடியோடடக்கிவிட வேண்டும். ஜூரர்களிடம் சென்று இலஞ்சம் பெற்றுக்கொள்ள அவர்களைத் தூண்டும் தரகர்கள் கூட்டத்தை வேரோடு அழிக்க வேண்டும். குற்றத்தின் தன்மைக்கும், சிக்கியிருக்கும் அல்லது அதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஆசாமியின் நிலைமைக்கும் தக்கபடி 500, 600 டாலர்கள் கூட சிலர் அவர்கட்குக் கொடுக்கிறார்கள்" என்றார்.

அச்சமயம் ஜெகநாதன் "உஸ்! பேசவேண்டாம்" என்று சமிக்கை செய்தான். ஏனெனில் அவன் நிற்குமிடத்திலிருந்து, இரண்டுபேர் தாங்களிருக்கும் அறையை நோக்கி வருவதைக் கண்டான். அவர்கள் இவனைமட்டுமே

பார்த்துவிட்டுப் பக்கத்தறையில் நுழைந்தார்கள். அவர்கள் மெதுவாய்ப் பேசினாலும் கொஞ்சங்கொஞ்சம் அப்பேச்சு இவர்களுக்குக் கேட்டது. அப்போதுதான் நாம் இங்கு பேசினாலும் அடுத்த அறையிலிருப்பவர்களுக்குக் கேட்கும் என்று இவர்களுக்கு எச்சரிக்கை யுண்டாகியது.

வந்த இரண்டு ஆசாமிகளில் ஒருவன் மற்றவனை நோக்கி "நாம் மிக்க ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். பிரதானமான ஹோட்டல்களி லெல்லாம் கார்டன்தன் துப்பறியும் ஆட்களை வைத்திருக்கிறான். அவர்கள் வேலைக்காரர்களோடு கலந்துகொண் டிருக்கிறார்கள்" என்றான். மற்றவனுடைய பதில் கேட்கவில்லை.

கருணாகரம் பிள்ளை "பேசியவன் கனகசபையின் ஆட்களில் ஒருவன். அவன் எதற்கும் முன் சாக்கிரதையாய் நடந்துகொள்கிறான்," என்றார். இவர்கள் பேச்சைக் கேட்ட கிருஷ்ணாராவ் தான் உயரத்தில் வைத்த பெட்டியையும் கம்பிகளையும் ஒரு விதமாய் ஒழுங்கு படுத்திக் கொண்டான்.

பக்கத்தறையில் முன் பேசியவன் மறுபடி பேசத் தொடங்கி "இப்போதிருக்கும் ஜூரர்களைச் சரிப்படுத்த ஆயிரம்டாலர் மிக்க அதிகம் என்று முதலாளி கூறுகிறார். நீயாவது உன் நண்பரில் யாராவது இதை முடிப்பதாயின் சீக்கிரம் ஒரு முடிவிற்கு வா" என்றான். மற்றவன் தடுமாற்றத்தோடு மெதுவாய் என்னமோ பதிலளித்தான். அவன் பேரத்தில் வாதிப்பதாய்த் தோன்றியது.

கனகசபையின் ஆள் "நீ என்னமோ அப்படிக் கூறுகிறாய். நாங்கள் ஒவ்வொரு சமையத்தில் தலைக்கு ஐந்தைந்து டாலரிலேயே காரியத்தை முடித்திருக்கிறோம். ஆனால் இதுபோன்ற முக்கியமான விஷயத்தில் அதிகமாகவே

அவர்கள் கேட்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்'' என்றான்.

மற்றவன் முணமுண வென்று என்னமோ கூறினன். "ஆபத்து'' என்ற வார்த்தை மட்டும் இவர்களுக்குக் கேட்டது. பின்னும் சற்றுநேரம் வாதம்நடந்தது. கடைசியில் கனகசபையின் ஆள் "சரிதான். தலைவர் பின் அறையி லிருக்கிறார். இங்கேயே இரு; அவர் தனியாகவேயிருக்கிறாரா என்று பார்த்து வருகிறேன்'' என்று கூறி விட்டுச் சென்றான். சற்றுநேரங் கழித்து அவன் திரும்பி வந்து மற்றவனை நோக்கி மெதுவாய் "தனியாகவே யிருக்கிறார்; நீ போய்க் கண்டுகொள்'' என்றான். அந்த மனிதன் அவ்வாறே யெழுந்து பின் அறைக்குச் சென்றான்.

ஜெகநாதனும் கருணாகரம் பிள்ளையும் பேசாமலிருந்தார்கள். ஆனால் கிருஷ்ணராவ் மட்டும் மிக்கமனத் துடிப்போடு மேஜைமேலேறி நின்று மேலே வைத்திருக்கும் பெட்டியைக் கரத்தில் பற்றிக்கொண்டு நின்றான். பிறகு அதிலிருந்த ஒரு மரையைத்திருப்பி, கம்பியின் நுனியிலிருந்த ஒரு பொத்தானை யழுத்தினன். அதன்பிறகு பின்னும் எட்டிநின்று கனகசபையிருக்கும் அறையை நோக்கியபடி கருணாகரம் பிள்ளையிடம் "பொத்தானை யழுத்தும். மறுபடி, மறுபடி'' என்றான். பிறகு சட்டென்று கீழே குதித்து உட்கார்ந்து விட்டான்.

அச்சமயம் ஜெகநாதன் "கிருஷ்ணராவ்! ஹோட்டல் ஆள் வருகிறான்'' என்றான்.

நேரமானதால் வெளியறையில் அதிக ஜனங்கள் வரத் தொடங்கினார்கள். இவர்களிருக்கு மறையில் ஒரு ஆள் மேஜைமேலேறி நிற்பதைப்பார்த்ததே யாவரும் அதைக் கவனிக்கலானார்கள். ஹோட்டல் ஆள் ஒருவன் அதைப்

பார்த்து கிருஷ்ணராவை நோக்கி உள்ளே வரத்தொடங்கினன்.

கிருஷ்ணராவ் உடனே சட்டென்று கம்பியைப் பிடித்திழுத்துக் கீழே விழப்போன தன் பெட்டியைப் பிடித்துக் கொண்டு மடியில் மறைத்துக் கொண்டான். ஹோட்டல் ஆள் அங்குவந்து இங்கே என்ன செய்கிறீர்கள்? என்றான். கருணாகரம் பிள்ளையும் ஜெகநாதனும் எழுந்து கிருஷ்ணராவுக்கும் அந்த ஆளுக்கும் இடையில் நின்றார்கள். பக்கத்தறையில் தனியாய் உட்கார்ந்திருந்த கனகசபையின் ஆள் வெளியில் வந்து பார்த்தான். அவன் கருணாகரம் பிள்ளையைக் கண்டதும் "ஓ! துரைத்தன வக்கீல கருணாகரம் பிள்ளை" என்று கூவினன். அச்சத்தம் வீதியில கேட்டிருக்கும்.

அப்பெயரைக் கேட்டதே அந்த ஜனங்கள் எல்லாம் தட்டென்று பின்னிடைந்து பிரமித்து விட்டார்கள். ஒருவருக்கும் இன்னது செய்வதென்று ஒன்றும் தெரியவில்லை. அதற்குள் கிருஷ்ணராவ் கருணாகரம் பிள்ளையையும் ஜெகநாதனையும் இரண்டு கரங்களையும் பற்றி அழைத்துக் கொண்டு வெளியில் புறப்பட்டான். ஜனங்களெல்லாம் சட்டென்று விலகிவிட்டார்கள். கனகசபை இவர்களைக் காணச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. கால்மணி நேரத்திற்குள் மூவரும் ஒரு வண்டியில் ஏறிப் புறப்பட்டார்கள். ஹோட்டல் வேலைக்காரனும் மற்ற ஜனங்களும் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள்.

---

## 10—வது அத்தியாயம்.

கருணாகரம் பிள்ளைக்கும் ஜெகநாதனுக்கும் நடந்தது இன்னதென்று விளங்கவில்லை. ஆனல் கிருஷ்ண

ராவின் முகத்திலிருந்த சந்தோஷத்தைக்கண்டு என்னமோ அனுகூலமான விஷயம் நடந்திருக்கிறதென்று அவர்கள் உணர்ந்தார்கள். மூவரும் கிருஷ்ணராவின் இரசாயன சாலையில்போய் உட்கார்ந்தார்கள்.

கிருஷ்ணராவ் உடனே எழுந்து தன் மேற்சட்டையைக் களைந்துவிட்டு, மிக்க ஜாக்கிரதையோடு தன் மடியிலிருந்த பெட்டியை யெடுத்துக் கொண்டு, புகைப்படம் பிடிப்பவர்கள் அதை முதலில் கழுவி வேலை செய்வது போல ஒரு பெரிய கூடைபோன்ற மூடிக்குள் அதை வைத்துவிட்டு, அலமாரியைத் திறந்து பலவித ஔஷதப் புட்டிகளை யெடுத்துவந்து அந்த மூடிக்குள் இடுப்புவரை நுழைந்து கொண்டு, அங்கு ஒருவித மந்தமான தீபப் பிரகாசத்தில் வேலை செய்யத் தொடங்கினன்.

கிருஷ்ணராவ் எடுத்துச் சென்றது ஒருவிதப் புகைப் படம் பிடிக்கும் கருவியே. ஆனல் அது மிகத் துரிதமாய்ப் பிடிக்கும்படி நவீனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவி. கிருஷ்ணராவ் அத்தகைய கருவியைக் கண்டுபிடித்துத் தன் இரசாயனசாலையில் வைத்து வேலை செய்துகொண்டிருக்கிறன்.

கருணகரம் பிள்ளையும் ஜெகநாதனும் சுமார் அரை மணிக்கு அதிகமாகவே காத்துக்கொண்டிருக்கவேண்டிய தாயிற்று. கடைசியில் அவன் தன் இரகசிய அறையிலிருந்து வெளிவந்ததும் இன்னும் மெருகிடப்படாத இரண்டு படங்களைக் கையிலெடுத்துக் கொண்டுவந்து இவர்களிருவர் முன்னும் காட்டினன்.

கருணகரம் பிள்ளை ஆவலோடு அப்படங்களைப் பார்த்தார். இரண்டாவது படத்தில் கனகசபை ஜூரர்களிடம் இலஞ்சம் கொடுக்க ஏற்பாடு செய்யும் தரகனிடம் நோட்டுகளும் உண்டிகளும் எடுத்துக் கொடுத்துக்கொண்

டிருப்பது நன்ருய்த் தெரிகிறது. அப்படம் மிக்க தெளிவாகப் புலப்படாவிடினும் அவசியமான வரையில் நன்ருய்த் தெரிகிறது.

அதைக்கண்டதே கருணுகரம்பிள்ளை நேராகவே கனகசபையிடம் சம்பாஷிப்பவர் போல் "ஹா! கடைசியில் நீ என்னிடம் அகப்பட்டு விட்டாய். ஐரோர்களுக்கு இலஞ்சம் கொடுத்துக் கெடுக்கும் உன் அநீதச் செயல் இதோடு முடிந்தது என்று எண்ணிக்கொள்" என்று கூறிவிட்டுக் கிருஷ்ணுராவை நோக்கி, "கிருஷ்ணுராவ்! இது கனகசபையின் விவகாரத்திற்கும், ஜட்கா சுப்பன் விவகாரத்திற்கும் முடிவாய்ப்போதும். இதற்கு இரண்டு பிரதிகள் எடுத்துக்கொள். எனக்கொன்று கொடு. அது எனக்குப் பொற்புதையல்போல் அவ்வளவு முக்கியமானது. இது கிடைத்தது அக்கறுப்புப் புத்தகமே என்னிடம் அகப்பட்ட மாதிரிதான்" என்ருர்.

கிருஷ்ணுராவ் புன்னகைபுரிந்து, "இன்று நமது மாலை வேலை வியர்த்தமாகவில்லை. இப்போது என்ன மணி?" என்ருன்.

கருணுகரம் பிள்ளை தன் கடியாரத்தைப் பார்த்து "நான் அப்போது என்ன மணி என்பதைக் கவனிக்கவில்லை" என்ருர்.

கிருஷ்ணுராவ்:—"சரி, இப்போது நாம் செய்யக்கூடிய காரியம் ஏதேனும் இருக்கிறதென்று நான் கருதவில்லை. பின்னுல் மேலேயிருக்கும் ஆட்களைப் பிடிக்க நாம் வேலை செய்யச் சற்று பலம் வேண்டியிருக்கும்" என்ருன்.

கருணுகரம்பிள்ளை ஆத்திரத்தோடு "ஏன்? எல்லாருக்கும் மேலிருக்கும் ஆளென்று கூறு" என்ருர்.

கிருஷ்ணுராவ் கருணுகரம் பிள்ளையை நோக்கி "இனி

நான் தங்களைக் காலையில் காண்கிறேன். அதற்குள் இக் கறுப்புப் புத்தகத்தைப் பற்றி யேதேனும் சமாசாரம் வரும் என்று நான் கருதுகிறேன்" என்றான். அதன் பிறகு கிருஷ்ணராவும் ஜெகநாதனும் தங்களறைகளுக்கும், கருணாகரம் பிள்ளை தமது மனைக்கும் ஏகினார்கள்.

கிருஷ்ணராவும் ஜெகநாதனும் தங்கள் அறைக்குச் சென்றதே அங்குவந்திருந்த தபால் கடிதங்களை யெடுத்துப் பார்த்தார்கள். கிருஷ்ணராவ் அவற்றில் ஒரு கடிதத்தை யெடுத்து "இதென்ன பார்! இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்? நாம் புறப்பட்ட சற்று நேரத்திற் கெல்லாம் இக் கடிதத்தை யவள் எழுதியிருக்க வேண்டும்" என்றான்.

ஜெகநாதன் அதை வாங்கிப் பார்த்தான். அது அழகாம்பாள் எழுதியகடிதம். அவள் கிருஷ்ணராவைத் தன் வீட்டில் நடக்கும் ஒரு விருந்திற்கும் பிறகு நடக்கும் நடனத்திற்கும் வரும்படி எழுதியிருந்தாள். அக்கடிதத்தின் முடிவில் "நமது இரத்தினபாயைப் பற்றிய விஷயங்களை நமக்குக் கூறக்கூடிய சில ஆட்களை இங்குவரும்படி செய்திருக்கிறேன" என்று வரைந்திருந்தாள்.

மறுநாள் காலை ஜெகநாதன் கிருஷ்ணராவைக் காண அவன் அறைக்கு வந்தபோது அவன் அங்கில்லை. அதனால் சரி; இரசாயன சாலைக்குத்தான் சென்றிருப்பான் என்று கருதிக்கொண்டான். காலையில் ஜெகநாதனுக்கு நட்சத்திர பத்திரிகையின் காரியாலயத்தில் கொஞ்சம் வேலையிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டு சற்று நேரங்கழித்துக் கிருஷ்ணராவின் இரசாயன சாலைக்குச் சென்றபோது கிருஷ்ணராவ் அங்கு வேலை செய்து கொண்டிருக்கக் கண்டான். ஜெகநாதன் அங்குச் சென்ற கால்மணி நேரத்திற்குள் கண்ணம்மாள் அங்கு வந்தாள். அவள் பார்வையா

லேயே ஏதோ முக்கியமான சமாசாரம் கொண்டு வந் திருக்கிறாள் என்பது தெரிந்தது.

கண்ணம்மாள் கிருஷ்ணராவை நோக்கி "தாங்கள் இரத்னபாய்க்குச் சின்ன மாளிகைக்கு அனுப்பிய கடிதம் அப்படியே திரும்பி வந்துவிட்டது. இதோ அக்கடிதம்; பாருங்கள். இது பிரிக்கப்படாதது போலவே திரும்பி வந்திருக்கிறது. விலாசதார் அங்கில்லை யென்ற குறிப் போடு திரும்பி வந்திருக்கிறது. ஆனால் இக்கடித உறை யின் பின்பக்கம் வாய்ப்புறத்தில் சில கறைகள் புலப்படு கின்றன. அவை யென்னவோ எனக்குப் புலப்படவில்லை. அவை அழுக்குபோல் புலப்படவில்லை." என்றான்.

கிருஷ்ணராவ் இச்சமாசாரத்தை யெதிர்பார்த்தவன் போலவே காணப்பட்டான். அவன் அக் கடிதத்தை வாங்கிப்பார்த்து "ஹா! இது பிரிக்கப்படாத கடிதமல்ல. இப்போது சாத்திர யுக்தமாய்க் கடிதத்தை யொருவரு மறியாவண்ணம் பிரிக்கும் வழிகள் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன. அதை யறிந்தே நான் எச்சரிக்கையாய் இக்கடிதத்தை யனுப்பினேன். நான் அனுப்பிய இக்கடித உறை யிதற்கென்று அமைக்கப்பட்டது." என்று கூறித் தன்னிடமிருந்த ஒருகடித உறையை யெடுத்துக் காட்டித் திரும்பிவந்த கடித உறையிலிருந்த கறைகளுக்குக் கார ணத்தைக்கூறி அக்கடிதம் யாராலோ பிரித்து மறுபடி இரகசியமாய் ஒட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மையை நிரூபித்தான்.

கண்ணம்மாள்:—"மரகதம் என்ற ஒருத்தியும், டாக்டர் வீரப்பன் என்பவனும் பூபாலன் காபி ஹோட்ட லில் சந்தித்துப் பேசப்போகிறார்கள். அது இன்று பிற்பகல் நான்குமணிச் சுமாருக்கு. இது வேலைத்

தரமோ அல்லது சாதாரண விஷயமோ தெரிய வில்லை" என்றாள்.

கிருஷ்ணராவ் புன்னகையோடு "முதற்றரமான வேலையே. உன் உதவியால் முன்னடி யறியப்படாவிட்டால் இது அப்படியேதான் ஆகும்" என்றான். அதன்பிறகு இவர்கள் கலந்துபேசி டாக்டர் வீரப்பனும் மரகதமும் சந்திக்குமிடத்தில் தாங்கள் இருப்பதென்று ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

அந்த ஏற்பாட்டின்படி கிருஷ்ணராவும், ஜெகநாத னும் பிற்பகல் மூன்று மணிக்கே பூபாலன் ஹோட்டலுக் குச் சென்றார்கள். அங்கு மரகதமும் டாக்டர் வீரப்பனும் சந்திப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். அந்த ஹோட் டலின் எதிரில் இருந்த பலவிதமான வண்டிகளால் அங்கு ஏராளமான ஜனங்கள் வருகிறார்களென்பது நன்றாகப் புலப்பட்டது. ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வந்து உள்ளே நுழைந்துகொண் டிருந்தார்கள்.

கிருஷ்ணராவ், உள்ளே நுழைந்தபின் ஒரு இடத்திற் சென்று ஜெகநாதனை நோக்கி "நாம் இங்கிருந்தால் கண் ணம்மாள் வருவதைக் காணலாம். நாமும் ஒருவரும் காணுதபடி யிருக்கலாம்" என்றான். அதன்படி தங்க ளுக்கு அங்கேயே ஆசனம் போடும்படி, ஹோட்டல் ஆளுக்குத் தாராளமாய் பணம் கொடுத்தான்.

அவர்கள் அவ்வாறே அங்கு உட்கார்ந்தார்கள். ஆனால் அந்த இடம் கிருஷ்ணராவ் கூறியபடி ஒருவரும் காணமுடி யாத இடமல்ல. இவர்கள் அங்கு உட்கார்ந்த இரண் டொரு நிமிடங்கழித்து இரண்டு பெண்கள் வெளித்தாழ் வாரத்தில் வந்து உட்கார்ந்து இவர்களை யுற்று நோக்கி னார்கள்.

சற்று நேரத்திற்குள் கண்ணம்மாள்வந்து தாழ்வாரத்

தில் நின்று ஒரேபார்வையில் அங்கிருந்த யாவரையும் நோக்கியபின், கிருஷ்ணராவும் ஜெகநாதனும் வந்திருப்பதைக்கண்டு புன்னகை புரிந்து சந்தோஷத்தோடு நோக்கினாள். கண்ணம்மாள் இவர்களோடு வந்து உட்கார்ந்த போது அவளும் அப்பெண்களைப் பார்த்தாள். ஆனால் அவர்கள் இவளைச் சட்டைசெய்ய வில்லை.

கண்ணம்மாள் கிருஷ்ணராவை நோக்கி "அதோ நமக்குநேராய் ஒருபலம் பொருந்திய மாது உட்கார்ந்திருக்கிறாள் பார், தெரிகிறதா? அவள்கூடப் பேசிக்கொண்டிருக்கிறானே, அவன்றான் அழகாம்பாள் கணவனாகிய மாரப்பன்" என்றாள்.

சற்றுநேரங்கழித்துக் கிருஷ்ணராவ் தன் கண்களால் ஒருபக்கம் குறிப்பாய்க் காட்டி "அதோ டாக்டர் வீரப்பன்" என்று குசு குசு வெனக் கூறினான். சற்று எட்டவிருந்த ஒரு சிறுகூடத்தில் மாரப்பன் உட்கார்ந்திருந்தான். அவன் அடிக்கடி ஆவலோடு தன்கடியாரத்தையெடுத்துப் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் செய்கையால் அவன் யாருக்காகவோ ஆவலோடு காத்திருப்பதாகவும் அவர்கள் வராததற்காகக் கவலைப்படுவதாகவும் புலப்பட்டது.

அச்சமயம் ஹோட்டலின் எதிரில் ஒரு வண்டிவந்து நின்றதும் ஆடம்பரமா யுடையணிந்த ஒருமாது அதினின்றும் இறங்கி ஹோட்டலுக்குள் வந்தாள். இவள்தான் டாக்டர் வீரப்பன் சந்திக்க வந்திருக்கும் மரகதம் என்பவள் என்பது புலப்பட்டது.

மரகதம் மிக்க நாணயமாய் உடை யணிந்திருந்தாள். டாக்டர் வீரப்பன் அவளை வரவேற்கும்போது கண்ணம்மாள் அவள் உடையணிந்திருந்த மாதிரியைக்கண்டு திடுக்கிட்டாள். ஏனெனில் மரகதத்தினிடம் அங்கிருந்தவர்கள் கவனிக்கத் தக்கவிதமாக அவ்வளவு அதிக செயற்கை

வனப்பிருந்தது. அப்படியவள் செய்துகொண் டிருந்தா லும் அவளுடைய இலக்ஷணக்குறைவு பூரணமாய் மறைய வில்லை.

கிருஷ்ணராவ் "அம்மாது உச்சந்தலைமுதல் உள்ளங் கால் வரையில் மோசக்காரி யென்பது நன்ருய்த் தெரி கிறது" என்ருன். கண்ணம்மாள் "அப்படி யிருந்தாலும் எல்லாரும் அவளை நோக்குவதற்காகவே. இங்குள்ளமாதர் அவள்மேற் பொருமைப் படுகிருர்கள் என்பது தெரிகிற தல்லவா?" என்ருள். டாக்டர் வீரப்பனும் மரகதமும் சங்கிதம் நடக்கு மிடத்திற்குச் சற்று அருகிலுட்கார்ந்திருந் தார்கள். அதனுல் அவர்கள் சம்பாஷணை நன்ருக இவர்க ளுக்குக் கேட்கவில்லை. இடையிடையில் இரண்டொரு வார்த்தைகளே கேட்டன.

டாக்டர் அம்மாதை நோக்கி "நீ நடனம் செய்ய மாட்டாயோ?" என்ருன். மரகதம் "இல்லை - நான் விவ காரங்கள் எப்படி நடைபெறுகின்றன வென்பதை யுனக் குக் கூறுவதற்கு வந்தேன்" என்ருள். அவள் குரல் இனி மையாயில்லை.

சற்று நேரங்கழித்து அவள் "யாரோ வெளியில் கூறி விட்டதுபோல் காண்கிறது. ஆனல் அது யார் என்பது தான்........." என்ருள்.

டாக்டர் "அவ்வளவு கெடுதி என்று எனக்குத்தெரி யாது" என்ருன்.

பிறகு அவர்கள் சில நிமிடங்கள் குசுகுசு வென்று பேசிக்கொண் டிருந்தார்கள். கிருஷ்ணராவ் தன் ஜேபியி லிருந்த புத்தகத்தை யெடுத்து அதில் மரகதத்தின் அவயவ இலக்ஷணங்களைப் பற்றிக் குறிப்பு எழுதத் தொடங்கினன். பிறகு அவளுடைய அங்க இலக்ஷணங்களைக்கொண்டு அவள் குணவிசேஷங்களை யறியவேண்டு மென்று எண்ணினன்.

இடையில் சங்கீதம் சற்று நிறுத்தப்பட்டபோது “இன்னும் சில எனக்குவேண்டும்....” என்று வீரப்பன் கூறுவது கேட்டது. இரண்டொரு நிமிடங்கள் கழித்து டாக்டர் வீரப்பன் தன் உட்சட்டை ஜேபியில் கையிட்டு ஒரு சிறு கடிதக்கட்டை யெடுத்து மரகதத்தினிடம் கொடுத்தான். அவளதைக் கையில் வாங்கிக்கொண்டதும் இருவரும் ஒருவரை யொருவர் உற்று நோக்கினர்கள்.

மரகதம் “நீ பிற்பாடு என்னைக்காண வருவாயல்லவா ?” என்ருள். டாக்டர் ஆம் என்று தலையசைத்தான்.

பிறகு மரகதம் “கொஞ்சம்...நீ உயிரைக்காப்பாற்றுகிற....” என்று கூறுவது கேட்டது. பிறகு “....சொல்லுகிருன்....மிகவும் அவசியமாய் வேண்டுமாம்....வந்துபார்க்க மறக்கவேண்டாம்” என்ருள். இரண்டு நிமிடங்கள் கழித்து, “ஆம், வந்தனம். இன்னும் ஒன்றே” என்றது கேட்டது.

ஜனக்கூட்டமா யிருந்ததால் அவர்கள் உருவங்கள் மறைவதும் புலப்படுவதுமா யிருந்தன. திடீலென்று மாரப்பனும் மரகதமும் ஒருவரை யொருவர் நோக்கினர்கள். ஒரு விநாடியே யவர்கள் கண்கள் சந்தித்தன. இருவரும் அறிமுக மில்லாதவர்கள் போல் தோன்றினர்கள். பிறகு மரகதம் டாக்டர் வீரப்பனிடம் என்னவோ கூறினள். மாரப்பன் சட்டென்று குனிந்து இரண்டொரு வார்த்தைகள் கூறினன். அவர்கள் நாடகம் ஒரு நிமிடத்தில் முடிந்துவிட்டது.

சற்று நேரங்கழித்து நடனம் முடிந்ததும் மாரப்பன் மரகதம் இருக்கும் திக்கை நோக்கிப் புன்னகை புரிந்தான். அதன்பிறகு டாக்டர் வீரப்பனும் மரகதமும் புறப்பட ஆயத்தப்பட்டார்கள். அதை யறிந்ததும் கிருஷ்ணராவ் ஹோட்டல்காரனுக்குப் பணம் கொடுத்து விட்

டான். அவர்கள் புறப்பட்டதும் இவர்களும் பின்னாலேயே தொடர்ந்தார்கள். வெளியில் செல்லும் கிருஷ்ணராவ் கண்ணம்மாளிடம், "இவர்கள் பிரிந்து விடுவதாயின், நானும் ஜெகநாதனும் வீரப்பனைத் தொடர்ந்து செல்வோம்; நீ மரகதம் பின்செல்" என்றான்.

கிருஷ்ணராவ் ஆயத்தமாக ஒருவண்டி பேசிச் சாரதியிடம், மரகதம் பேசியவண்டியைச் சுட்டிக்காட்டி, "அந்த வண்டியின் பின்னால் தொடர்ந்து செல்லவேண்டும், மற்ற விஷயம் இந்த அம்மாள் கூறுவார்கள்" என்று கண்ணம்மாளை யவ்வண்டியில் ஏற்றிவிட்டான்.

டாக்டர் வீரப்பன் சற்றுநேரம் இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைப்பவன்போல் சிந்தனையோடு விழித்துக்கொண்டிருந்தான் கிருஷ்ணராவும் ஜெகநாதனும பேசாமல் அவனை நோக்கிக்கொண்டே யிருந்தார்கள். கடைசியில் வீரபபன் வீதியின் ஓரமாய்த் துரிதமாக நடககத் தொடங்கினான். இவர்களும் தொடர்ந்து சென்றார்கள. வீரபபன் மூன்று நான்கு வீதிகளைக் கடந்து கடைசியில் ஒரு குறுக்குச்சந்தில் நுழைந்து ஒரு கட்டிடத்தின் கீழ்க்கட்டில் நுழைந்தான்.

அக்கட்டிடம் மிகக பழுதடைந்த நிலைமையிலிருந்தது. அதன் முன்பககம் இரண்டு வாயிற்படிகளிருந்தன. ஒன்று நேராகக் கீழக்கட்டிற்குச் செல்கிறது. மற்றொன்று மேல் மாடிக்குச் செல்லும்படி படிகளின்முன் இருக்கிறது. அந்தப் பிரதேசமே அயோக்கியரிருக்குமிடம்.

கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி "நீயும் உள்ளே நுழைய விரும்புகிறாயோ?" என்றான். ஜெகநாதன் ஆம் என்றான். அச்சமயம் வெள்ளையுடை யணிந்த ஒரு நீக்ரோ ஆடவன் ஒரு பெண்ணை யழைத்துக் கொண்டு படிகளில் ஏறினான். கிருஷ்ணராவும் ஜெகநாதனும் படிகளில் ஏறிச்

சென்றார்கள். மேலேயிருந்த வாயிற்படி யருகில் அந்த ஹோட்டல் முதலாளி நின்றுகொண்டு வருகிறவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். அந்த வீடு வெளிப்பார்வைக்கு மிக்கத்தாழ்ந்தவிடமாய்த் தோன்றினும் உள்ளே இரண்டு வீடுகளின் விஸ்தீரண மிருந்தது. பிற்பகல் முன்னேரமாயிருந்தும் அதற்குள்ளாகவே அனேகம் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள்.

நீக்ரோ ஜாதியாரில் அனேகர் வந்திருந்தார்கள். ஐந்தாறு சுதேச மாதரும் அங்கிருந்தார்கள். கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி "டாக்டர் வீரப்பன் அதோ பின்னால் இருக்கிறான். யாரோ ஒரு ஆளிடம் பேசிக் கொண்டிருக்கிறான்" என்றான். அச்சமயம் இவர்கள் வேடிக்கை பார்க்க வந்திருப்பவர்கள்போல் பேசாமல் இருந்ததால் ஹோட்டல் வேலைக்காரரில் ஒருவன் புன்னகையோடு இவர்கள் அருகில்வந்து ஏதாவது வேண்டுமா என்று கேட்பவன்போல் குறிப்பாய் நோக்கினான்.

கிருஷ்ணராவ் அவனை யருகிலழைத்து டாக்டர் வீரப்பனைக் குறிப்பாய்க் காட்டி "அதோ அந்த மனிதனோடு பேசிக் கொண்டிருப்பவன் யார்?" என்று வினவினான். வேலையாள் பெருமையோடு "அவர்தானுங்கோ, ஈட்டித் தானன் என்பவர்" என்றான். அதைக் கேட்டதே ஜெகநாதன் அச்சத்தோடு அவனை நோக்கினான். இந்த ஈட்டித் தானன் என்பவன் முன்பு மிக்க பலம் பொருந்திய போக்கிரியாய்ப் பிரசித்தி பெற்றிருந்தவன். இப்போது சில துஷ்ட மாதர்களுக்கு அடைக்கல ஸ்தானமளித்து உதவி செய்து அவ்வழியாய் ஜீவிக்கிறான் என்பது வதந்தி. இச் சங்கதி ஜெகநாதனுக்குத் தெரியும்.

சங்கீதமும் நடனமும் நடந்துகொண்டிருப்பதால் கேளிக்கையும் சந்தடியும் அதிகமாகவே யிருந்தன. கிருஷ்

ஷ்ணுராவும் ஜெகநாதனும் உட்கார்ந்திருந்த விடத்திற்குப் பக்கத்தில் ஒரு ஆடவனும் ஒருஸ்திரீயும் உட்கார்ந்து தாழ்ந்தகுரலாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். ஆயினும் இடையிடையில் ஒவ்வொரு முழுவாக்கியங்களும் இவர்களுக்குக் கேட்டன அவர்கள் அன்னியர் கேட்காவண்ணம் பேசவேண்டு மென்று அவ்வளவாகச் சாக்கிரதையெடுத்துக்கொள்ள வில்லை. அம்மனிதன் "அவன்முன்பைமுழுதும் அமுக்கப் பார்த்தான். அதற்குப் பதிலாக அவனே அமுக்கப்பட்டு இருட்டில் படுக்க நேர்ந்தது" என்றான்.

அதைக்கேட்ட கிருஷ்ணுராவ் "இரண்டுகள்ளர்கள்—ஜேபியில் கைபோடுகிறவர்கள். யாரோ ஒருவன் வழிப்போக்கன் ஜேபியிலிருந்ததை யெல்லாம் அடியோடு திருடிக்கொள்ள முயன்றான். ஆனால் போலீஸ்காரனிடம் பிடிபட்டுச் சிறைசெய்யப்பட்டான். அதுதான் அம்மனிதன் கூறியதன் அர்த்தம்" என்றான்.

ஜெகநாதன் "பேஷ்! நல்லதொழில்" என்று அவர்களை நோக்கினன். இவர்களேதோ களவாட யோசிக்கிறார்களோ வென்று சிந்தித்தான். அதற்குள் ஹோட்டல் முதலாளி அவர்கள்மேல் கண்வைத்துக்கொண் டிருப்பதைக் கண்டான்.

சற்று நேரத்திற்குள் அம்மாது எழுந்து சென்றாள். ஆடவன் மட்டும் அங்கேயே உட்கார்ந்திருந்தான் பிறகு கிருஷ்ணுராவும், ஜெகநாதனும், டாக்டர் வீரப்பனும், ஈட்டித்தானனும் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒட்ட விருந்தபடியால் என்ன பேசுகிறார்கள் என்று ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் ஏதோ மிக முக்கியமான விஷயமே பேசுகிறார்கள் என்பது மட்டும்

தெரிகிறது. ஏனெனில் வேறெதையும் அவர்கள் கவனிக்கவில்லை.

நடனம் முடிந்துவிட்டது. இருவர் மட்டும் சங்கீதம் பாடிக்கொண்டிருக்கிறார்கள். டாக்டரும் ஈட்டித்தானனும் இன்னும் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். திடீலென்று கிருஷ்ணராவ் ஜெகநாதனைப் புயத்தால் இடித்தான். ஜெகநாதன் சட்டென்று பார்த்தபோது டாக்டர் வீரப்பன் முன்பு மரகதத்தினிடம் கொடுத்தது போன்ற ஒரு சிறு கடிதக்கட்டைத் தன் உள்ஜேபியிலிருந்து எடுத்து ஈட்டித்தானனிடம் கொடுப்பதைக் கண்டான். தானன் அதை வாங்கிப்பார்த்துத் திருப்தியோடு ஜாக்கிரதையாய் மேல் அங்கியின் வலதுகைப்பக்கமிருக்கும் ஜேபியில் வைத்துக்கொண்டான்.

கிருஷ்ணராவ் "வீரப்பன் இவர்களிடம் என்ன கொடுத்தான்?" என்றான். ஜெகநாதன் 'ஔஷதங்கள்' என்றான் கிருஷ்ணராவ் "உண்மையில் என்னவென்றறிய விரும்புகிறேன்." என்றான். அச்சமயம் டாக்டர் வீரப்பனும் ஈட்டித்தானனும் எழுந்து மறுபக்கமாய்க் கதவை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் பக்கம் திரும்பினாலும் தங்கள் முகத்தைப்பார்க்க முடியாதபடி கிருஷ்ணராவும் ஜெகநாதனும் மறுபக்கம் திரும்பிக் கொண்டார்கள். ஆனால் டாக்டரும் தானனும் ஒருவரையும் கவனிக்கவில்லை. டாக்டர் கடிதங்களைக் கொடுப்பதாலும், சமாசாரம் அறிந்து கொள்வதாலும், அவன் வந்த வேலை முடிந்ததுபோல் தோன்றியது. வாயிற்படியருகில் அவர்கள் சற்று நின்றதும் ஹோட்டல் முதலாளியிடம் டாக்டர் பேசினான். அவன் அப்படியேயாகட்டுமென் பதுபோல் தலையசைத்தான்.

கிருஷ்ணராவுக்கு எப்படியேனும் ஒற்றுக் கேட்டு

உண்மையை யறியச் சந்தர்ப்பம் வாய்க்காமலிருப்பது மனதிற்கு மிக்க அருவருப்பாகவே யிருந்தது. ஆயினும் அவன் பார்வையால், ஏதேனும் சந்தர்ப்பம் வாய்க்குமா வென்று ஆழ்ந்த சிந்தனையோடும், நோக்கத்தோடும் இருக்கிறனென்பது தெரிந்தது. கிருஷ்ணராவ் தங்களுக்குப் பின்னல் உட்கார்ந்திருக்கும் கள்ளனைத் திரும்பிப் பார்த்து, ஒருவிதமான சமிக்கையோடு "உனக்கு இருபத்தைந்து டாலர் சம்பாதிக்க விருப்பமா? அதேமாதிரி" என்றான். அந்த ஆள் சந்தேகத்தோடு நோக்கினன்.

கிருஷ்ணராவ்:--"இப்போது இங்கு உன்னேடுகூடவிருந்து சென்ற மாது உன் ஆள் தானே?" என்றான்.

அம்மனிதன் பாதிக் கோபத்தோடு "ஓகோ! என்ன கதை நீ கூறப்பார்க்கிறய்?" என்றான்.

கிருஷ்ணராவ் :—" உடாய்க்காதே - எனக்குத் தெரியும். நான் செந்தலேகளில் ஒன்றல்ல. நான் களங்கமின்றிக் கூறுகிறேன். இருபத்தைந்து டாலர் சம்பாதிக்க உனக்குப் பிரியமா இல்லையா? அவ்வளவே" என்றான்.

கிருஷ்ணராவின் மாதிரி அவனுக்கு முதலில் கலவரமாயிருந்தது. பிறகு இவர்களிருவரும் சூதில்லாமல் நடக்கிறர்கள் என்று அவனுக்குப் புலப்பட்டது. அதன்மேல் அவன், "எப்படி? ஹோட்டல்காரன் பார்ப்பதாயின் நான் உன்னைவிட்டுப் போய்விடுவேன். ஏனெனில் இங்கு கைகாட்டும் சங்கதி யேதேனும் நடந்தால் அவன் பிறகு இங்கே சேர்க்கமாட்டான்" என்றான்.

கிருஷ்ணராவ் :—அந்த ஈட்டித்தானன் அம்மனிதனேடு பேசிக்கொண்டு போனனே பார்த்தாயல்லவா?

கள்ளன்:—ஆம், கண்ணாடி போட்டுக்கொண் டிருந்தானே-
அவன் கூடச்சென்றானே? அவன்றானோ?

கிருஷ்ணாராவ்:—"ஆம். கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தவன் ஈட்டித்தானனிடம் ஒரு சிறு கடிதக் கட்டை யளித்தான், தானன் அதை மேல் சட்டையின் வலது பக்கச் சேபியில் வைத்துக்கொண்டிருக்கிறான். அதை நீ கொண்டுவந்து விட்டால் இருபத்தைந்து டாலர்கள் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

கள்ளன்:—"சரி. இப்போது ஐந்து டாலர் கொடும். நான் அதைக் கொண்டுவந்தபின் மீதியைக் கொடும்" என்றான்.

கிருஷ்ணாராவ் சிந்தித்தான். அதைக்கண்ட கள்ளன் "நான் கபடின்றிக் கூறுகிறேன். என்கைகளில் முக்கியமான ஒன்றை யமுக்கி விட்டார்கள். அதற்காக நியாயப் புரட்டனுக்கு ஐம்பது டாலர் தளர்த்தவேண்டும். அதற்காக நாங்கள் மிக்க கஷ்ட நிலைமையி லிருக்கிறோம்" என்றான்.

**கிருஷ்ணாராவ்:—"இப்போது நீ கூறுவதால் உன் நண்பரில் ஒருவன் சிறைசெய்யப்பட் டிருக்கிறான். அவனை மீட்க வக்கீலுக்கு ஐம்பது டாலர் கொடுக்கவேண்டும் என்று தெரிகிறது. சரி அப்படியாயின் இந்தா" என்று ஐந்து டாலர் அவனிடம் கொடுத்தான்.**

**அக்கள்ளன் அதை வாங்கிக்கொண்டு எங்கே சந்திப்பது என்றதே கிருஷ்ணாராவ் "இராஜமாளிகையில் இரவு எழுமணிக்கு இருப்பேன்" என்றான். கள்ளன் வந்தனமளித்துவிட்டுச் சென்றான். அவன் சென்றதும் ஜெகநாதன் "என்ன விவகாரம்?" என்றான். கிருஷ்ணாராவ் ஒரு விசேஷமுமில்லை. ஈட்டித்தானனிடம் இருக்கும் கடிதக்கட்டு என்னிடம் வரவேண்டும். அவ்வளவே" என்றான்.**

அதன்பிறகு இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள். கிருஷ்ணாராவுக்குக் கள்ளரின் பாஷை நன்ருய்த் தெரிந்திருந்தபடியாற்ருன் அக்கள்ளனை யறிந்துகொள்ளவும் தனக்குச் சாதகமான அந்த ஏற்பாட்டைச் செய்யவும் அனுகூலப்பட்டது. அதனுல் அவன் துப்பறியும் தொழிலுக்கு மிக்க அனுகூலம்.

---

## 11—வது அத்தியாயம்

இருஷ்ணாராவும், ஜெகநாதனும் வீதியில் சென்ற போதுமுதலில் டாக்டர் வீரப்பன் எங்கும் காணப்படவில்லை. இரண்டு வீதிகளைக்கடந்தபின் தூரத்தில் அவன் செல்வதைக் கண்டார்கள். இருவரும் துரிதமாய் நடந்து அவனை நெருங்கிச்சென்ருர்கள். அவன் பரசுராம் ஹோட்டலுக்குச் செல்லாமல் பெரியவீதியில் நடந்தான். அங்கு ஜனநடமாட்டம் அதிகமாதலால் இவர்கள் சுலபமாகவே அவனைத் தொடர்ந்து சென்ருர்கள்.

வீரப்பன் சின்னமாளிகை யிருக்கும் வீதியில் நுழைந்தான். எனினும், அவன் சின்ன மாளிகைக்குச் செல்லாமல் அங்கிருந்த ஒரு சிவப்புக்கட்டிடத்திற்குள் சென்ருன். அதன் வெளிப்பக்கம் "மங்கம்மாள் அழகுமாளிகை" என்று விளம்பரப்பலகை தொங்கிக்கொண் டிருந்தது.

கிருஷ்ணாராவ் "பரசுராமன் ஹோட்டல், சின்ன மாளிகை ஆகிய இத்தகைய இடங்களுக்குச் செல்லும் பெண்கள் இந்த மங்கம்மாளிடம் சென்று தங்களை அழகுபடுத்திக்கொண்டு செல்கிருர்கள். இவள் பலவித வர்ணங்களையும், மாதர்களுக்குச் செயற்கை வனப்பையுண்டாக்குவதற்கு அவசியமான அனேகம்கருவிகளையும் ஆயத்தமாக வைத்துக்கொண் டிருக்கிருள். அங்குச்சென்று அவளுக்

குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டால் பல்லில்லாக் கிழவிக்கும் யௌவனமான பெண்ணின்வேட மணிந்து விடுகிறாள்." என்றான்.

ஜெகநாதன் அங்கு நின்று அவ்வீட்டை யுற்று நோக்கிக்கொண் டிருந்தான். கிருஷ்ணராவ் "இதை யேன் பார்த்துக்கொண் டிருக்கிறாய்? வா இராஜமாளிகைக்குச் செல்வோம். அங்கு ஆகாரமும் கிடைக்கும்" என்றான்.

உடனே இருவரும் நேராக இராஜமாளிகை யென்ற ஹோட்டலுக்குச் சென்றார்கள். அங்குத்தான் ஈட்டித்தானனிட மிருக்கும் கடிதக்கட்டைக் களவாடிவரச்சென்ற கள்ளனைக் கிருஷ்ணராவ் சந்திப்பதாய் ஏற்பாடு செய்திருந்தது. அக்கள்ளன் ஈட்டித்தானன் போன்ற ஆசாமியிட மிருந்து அதைக் களவாடிவரக்கூடும் என்று ஜெகநாதன் நம்பவேயில்லை. ஆயினும் இருபத்தைந்து டாலர் என்ற தொகை அவனைச் செய்யும்படி தூண்டி விட்டது.

இவர்கள் இருவரும் இராஜமாளிகைக்குச் சென்று சிற்றுண்டி யருந்திக்கொண் டிருக்கும்போதே அக்கள்ளன் வந்து விட்டான். அவன் முகத்தைப் பார்த்ததே அவன் காரியசித்தியோடு வந்திருக்கிறான் என்று புலப்பட்டது. அவன் கிருஷ்ணராவி னருகில் வந்து குசுகுசுவென்று "இதோ கொண்டுவந்தேன். இந்த ஹோட்டல் முதலாளி யென்னையறிவான். ஆகையால் நான் உடனே போய்விட வேண்டும்" என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த கடிதக்கட்டை யளித்தான்.

கிருஷ்ணராவ் அதை வாங்கிப்பார்த்து "ஓ இது இருபத்தைந்து டாலருக்குமேல் உனக்களிக்குமா வென்று முன்னமே நீ பார்த்துக் கொண்டாய். எப்படி யானுலு மாகட்டும். இதைக் கொண்டுவந்து கொடுத்து விட்டாய்,

மிக்க வந்தனம்" என்று உடனே பணத்தையளித்துவிட்டான். கள்ளன் மிக்க வந்தனமளித்துச் சென்றான்.

அதன்பின் கிருஷ்ணராவ் அச் சிப்பத்தைப் பிரித்துப் பார்த்தபோது, அதில் சில சிறு பொட்டணங்கள் இருந்தன. ஒவ்வொரு பொட்டணத்திலும் வெண்மையாகவும் பளபளப்பாகவும் உள்ள ஒருவிதச் சூரணம் இருந்தது. கிருஷ்ணராவ் "சரி, இரசாயன ஆராய்ச்சிக்கு வேலைவந்தது. இனிப் புறப்பட்டு நமது இரசாயன சாலைக்குச் செல்வோம்" என்றான்.

சற்று நேரத்திற்குள் கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அங்கிருந்து புறப்பட்டுக் கிருஷ்ணராவின் இரசாயன சாலைக்குச் சென்றார்கள். அங்குச் சென்றதும் கிருஷ்ணராவ் தன்னிடம் சிக்கிய ஔஷதத்தைச் சோதனை செய்வதற்கான வேலையைச் செய்யத் தொடங்கினன். அச்சமயம் கதவு திறக்கப்பட்டதும் கண்ணம்மாள் உள்ளேவந்தாள்.

கிருஷ்ணராவும் ஜெகநாதனும் சந்தோஷத்தோடு அவளை நோக்கினர்கள். அவள் கிருஷ்ணராவை நோக்கி "நான் டெலிபோனில் உன்னை யெங்குந் தேடினேன்; நீ யகப்படவில்லை. நான் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். உனக்கு அது மகிழ்வளிக்குமென நம்புகிறேன். நீ டாக்டர் வீரப்பன் கடிதம் ஒன்று வேண்டு மென்று கூறினையல்லவா? இதோ நான் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். கையாலடிக்கும் அச்சு எழுத்து (டைப்ரைடிங்)க் கடிதம்" என்று கூறிக்கொண்டே தன் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்துக் கிருஷ்ணராவிட மளித்தாள்.

கிருஷ்ணராவ் மிக்க வியப்படைந்து "இது எப்படி யுனக்குக் கிடைத்தது?" என்றான். கண்ணம்மாள் "நான் பரசுராம் ஹோட்டலில் உங்களை விட்டுப்பிரிந்து மரகதம் என்பவள் பின்னல் சென்றதில் மிக்க கஷ்டம் நேர்ந்தது.

நான் ஏறிச்சென்ற வண்டியின் ஆள் சுத்தமுடன். அம்மாது சின்ன மாளிகைக்குச் செல்வாள் என்று என் மனதிற்குப் புலப்பட்டதால் நான் சமாளித்துக் கொண்டு சென்றேன். அவ்வாறே யவள் அவ்வீதியில் நுழைந்தாள். ஆனால் சின்னமாளிகைக்குச் செல்லாமல் 'மங்கம்மாள் அழகு மாளிகை' என்ற விடத்திற்குச் சென்றாள்" என்றதே,

கிருஷ்ணராவ் "ஆ! டாக்டர் வீரப்பனும் கடைசியில் அங்குத்தான் சென்றான். அப்புறம் கூறு" என்றான்.

கண்ணம்மாள்:—"நான் அதற்குள் செல்ல முடியாது. ஆகவே நான் நேராய்ப்போய்விட்டேன். அச்சமயம் எனக்கு ஒருயோசனை யுதித்தது. அதாவது டாக்டர் வீரப்பன் வீட்டிலில்லாத சமயம் அவன் அறைக்குள் சென்று பார்ப்போம் என்பதே. எனக்குக் கள்ளரிடமுள்ள அனுபவத்தால் நோயாளிபோல் பாசாங்கு செய்யத்தெரியும். அதோடு டாக்டர் அங்கில்லாத போது அது சுலபமான காரியமே. நான் அங்குச் சென்றதும் நான் அவரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்பவர்களில் ஒருத்தி யென்றும், இப்போது அவர் வருமட்டும் காத்திருப்பே னென்றும் கூறி வெளியறையி லுட்கார்ந்தேன். டாக்டர் எந்தச் சமயத்தில் வந்து விடுவானோ என்று எனக்கு உள்ளே பயந்தான். எனக்குள் ஒரு யோசனை யிருந்தது. அங்கு ஒருசெவிலித்தா யிருந்தாள். அவள் உள்ளே செல்லுமட்டும் காத்திருந்தேன்.

அவள் சென்றதும் மெதுவாய் நடந்து அறைக்குள் இருந்த மேஜையருகிற் சென்றேன். அதன்மேல் அனேகம் கடிதங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றும் பிரயோசனப் படத்தக்கதாயில்லை. அவையாவும் வெளிமனிதர் எழுதி

யவை. அவற்றி லெதையேனு மெடுத்தெல் சந்தேகமுண்டாகும். அச்சமயம் யாரோவரும் சத்தம் கேட்டு வெளியில்போய் உட்கார்ந்து கொண்டேன். மறுதினம் டாக்டரின் காரியாலயத்தில் வேலைசெய்யும் பெண்வந்து மேஜைமேல் சில கடிதங்களை வைத்துவிட்டுச் சென்றாள். அவள் என்னைப் பார்த்தாள். ஆனால் தெரிந்து கொள்ளவில்லை.

அவள்சென்றதும் நான் உள்ளேபோய் அவள் வைத்த கடிதங்களைப் பார்த்தேன். அவற்றிலொன்று அவள் டாக்டருக்காகக் கையால் அச்சடித்துக் கொண்டுவந்தது. இதோபாருங்கள்" என்று அக்கடிதத்தைக் கொடுத்தாள்.

கிருஷ்ணராவ் அக்கடிதத்தை வாங்கி நன்றாய் நோக்கியபின் "நமது விவகாரத்திற்கு இது போதுமானது. இதில் டாக்டர் ஏதோ ஔஷதங்களைப்பற்றிய குறிப்புகள் எழுதியிருக்கிறான். நமக்கு வேண்டியது எழுத்தேயன்றி விஷயமல்ல." என்று கூறினான்.

அதன்பிறகு கிருஷ்ணராவ் அக்கடிதத்தை மேஜைமேல் விரித்துவைத்து முன்புவந்த அநாமதேயக்கடிதத்தையெடுத்து அதன் பக்கத்தில் வைத்து இரண்டு விதமான கண்ணாடித் துண்டுகளின் மூலமாய் இரண்டிலுள்ள எழுத்துகளையும் சோதிக்கத் தொடங்கினான். அதைக் கண்ட கண்ணம்மாள் மிக்க வியப்போடு அவனை நோக்கினாள்.

கிருஷ்ணராவ் "கண்ணம்மா! சாதாரணமாய் கையெழுத்தா யிருந்தால் தான் அதில் இரகசியம் கண்டுபிடிக்கலாமென்று சிலர் கருதுகிறார்கள். கையாலடிக்கும் அச்செழுத்தில்கூட கண்டு பிடிக்கலாம். அதை அச்சடித்தவர்கள் யாரென்றறியா விடினும் அது எந்த அச்சு எந்திரத்தில் அச்சடிக்கப் பட்டதென்று தெரிந்து கொள்ளலாம். அச்சடிக்கிறவர்கள் கூலிக்கு வேலை செய்வோர். நமக்கு வேண்டியது மூலகாரணமான ஆளே. இடம் தெரிந்தால்

ஆளைத் தெரிந்துகொள்ளலாம். கையச்சு எந்திரங்கள் புதியனவாய் இருக்கும்போது தான் எல்லா எந்திரங்களில் அச்சடித்தவையும் ஏறக்குறைய ஒன்றுகவே தோன்றும்—அதுவும் எழுத்துகள் வரையில் தான் அப்படித் தோன்றும். முழுக்கடிதங்களையும் நோக்கினல் அப்போதும் வித்தியாசம் தோன்றவே தோன்றும். ஏனெனில் அச்சடிப்போர் வெவ்வேறு யிருப்பதால் அவர்கள் அச்சடிக்கும் மாதிரியில் வித்தியாச மிருந்தேதீரும். ஒருவன் மெதுவாக வேலைசெய்வான்; ஒருவன் துரிதமாய்ச் செய்வான். இன்னும் பலவித வித்தியாசங்களுண்டு.

ஆனல் கொஞ்சக்காலம் வேலைசெய்த பின் எந்திரங்களிலுள்ள எழுத்துகள் முதலியவை தேய்வடைகின்றபடியால் ஒன்றுக்கொன்று எழுத்துக்களில் வித்தியாசம் ஏற்பட்டுவிடும். ஒரு எந்திரத்தில் சில எழுத்துகள் நுனியிலும், சில எழுத்துகள் அடியிலும் தேய்ந்திருந்தால், மற்ருெரு எந்திரத்தில் அந்த எழுத்துகளெல்லாம் நன்றுயிருக்க வேறு எழுத்துகள் தேய்ந்திருக்கும். ஆனல் இவற்றை யெல்லாம் பூதக்கண்ணுடி முதலிய கருவிகளைக் கொண்டு சூக்குமமாய்க் கண்டு பிடிக்கவேண்டும். இதோ பாருங்கள் இப்போது நீ கொண்டுவந்த கடிதத்தில் 'ம' என்ற எழுத்தில் ஆரம்பத்தில் கீழ்நோக்கி இழுக்கும் கோடு தலைப்புறம் கால் பங்கு தேய்ந்து போனதால் கடிதத்தில் பதியவில்லை. முழுமையும் அந்த எழுத்து அப்படியே யிருக்கிறது. இதோ இரண்டாவது 'ன்' என்ற எழுத்தில் மேல் புள்ளி போய்விட்டது. மூன்ருவது 'ஒ' என்பதில் முதல் சுழிகசுங்கிப் போயிருக்கிறது. இனி இந்த இரண்டு கடிதங்களும் ஒரே எந்திரத்திலிருந்து வெளியாயினவா அல்லவா என்பதைப் பார்ப்போம்" என்றுன்.

அதன்பிறகு மூவரும் அக்கடிதங்களை நன்ருகச்

சோதிக்கலானார்கள். கடைசியில் இரண்டும் ஒரே எந்திரத்திலிருந்து தான் வெளியாயின வென்பது ஐயமறப் புலப்பட்டது. எவ்வாறெனின் கண்ணம்மாள் கொண்டு வந்த கடிதத்தில் எந்தெந்த எழுத்துகள் எந்தெந்தமாதிரி பழுதடைந் திருக்கின்றனவோ அவ்வாறே அந்த அநாமதேயக் கடிதத்திலும் இருந்தன.

கிருஷ்ணராவ் "இப்போது ஒரு விஷயம் தெரிந்து விட்டது. அச்சியற்றிய ஆள் ஒரே ஆளாக விருந்தாலும் காரணபூதர் இரண்டிற்கும் வெவ்வேறாக விருப்பினும் இருக்கலாம், ஒருவராகவே யிருந்தாலும் இருக்கலாம். ஆனால் இந்த இரண்டும் சின்னமாளிகையிலுள்ள எந்திரத்திலிருந்தே வெளிவந்தன வென்பதும், அங்குவரும் ஆட்களில் சிலர் இரத்னபாய் காணமற்போன விஷயத்தில் சம்பந்தப்பட் டிருக்கிறார்களென்பதும் நிச்சயம்," என்றான்.

கண்ணம்மாள் "அதாவது, அங்குள்ள, நாம் பார்த்த அப்பெண் மூலமாக உண்மையை அறியப்போகிறோம். அல்லவா ?" என்றாள்.

கிருஷ்ணராவ் :—' ஆம். சந்தேகமின்றி," என்றான்.

கண்ணம்மாள் புறப்பட எழுந்து "இதுகாறும் ஒருவரும் பிரவேசிக்க முடியாதிருந்த அச் சின்ன மாளிகையில் நாம் இவ்வளவு காரியம் சாதித்துவிட்டோம் என்பது எனக்கே மிக்க வியப்பாக விருக்கிறது. என் ஆட்கள் அப்போதைக்கப்போது துண்டு துண்டு விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். இராத்திரிக்கு யாவும் ஒன்று சேர்த்து நாளைக்காலை வந்ததும் முதலில் அதைப்பற்றியே யறிவிக்கிறேன்" என்று கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றாள்.

அவள் சென்றதே, கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி "அவள் மனதில் என்ன சங்கதியோ வைத்துக்

கொண்டிருக்கிறாள். அது எதுவாயிருக்குமோ எனக்கு வியப்பாகவே யிருக்கிறது" என்றான்.

மறுநாள் கண்ணம்மாள் அங்கு வந்தபோது அவள் மனதிலிருப்பது இன்னதென்று வெளியாயிற்று. அவள் கிருஷ்ணராவையும் ஜெகநாதனையும் நோக்கி, "நண்பர்களே! என் மனதில் ஒரு சூழ்ச்சி யிருக்கிறது. ஒரு ஆலோசனை. இப்போது இச்சந்தர்ப்பத்தில், துரைத்தன வக்கிலாகிய கருணாகரம் பிள்ளையை யழைத்து அவரையும் கலந்து ஆலோசனை செய்வது யுக்தமல்லவா. ஏனெனில் நாம் இதில் ஒன்றுசேர்ந்து எதையும் செய்ய வேண்டியவர்கள். அவரும் சமயோசிதமான ஆலோசனை யேதேனும் கூறுவார். நாம் இதில் எவ்வளவுதூரம் மீறிவிட்டிருக்கிறோம் என்பதை எதிரிகளறிந்தால் பெரும்போர் நடக்கும். அப்போது நாமனைவரும் ஒன்றுசேர்ந்து வேலை செய்ய வேண்டியதே," என்றாள்.

கிருஷ்ணராவ் இது நேர்த்தியான ஆலோசனையே யென்றான். அதன்பின் மூவரும் புறப்பட்டுக் கருணாகரம் பிள்ளையின் காரியாலயத்திற்குச் சென்றார்கள். அங்குச் சென்றதும் தாங்கள் அவ்வளவு தூரம் வேலை செய்திருப்பதைப் பற்றி அவரிடம் கூறினார்கள். கிருஷ்ணராவும் கண்ணம்மாளும் சேர்ந்து செய்த காரியத்தைக் கேட்டபோது கருணாகரம் பிள்ளை மிக்க சந்தோஷ மடைந்தார். அவர் தாம் தெரிந்தெடுத்த ஆட்களைக்கொண்டு இதுகாறும் இத்தகைய விஷயங்களில் வேலை செய்ததில் இவ்வாறு ஒரு போதும் ஜெயமடைந்ததில்லை. அவர், "ஹா! நீங்கள் மட்டும் இச் சின்ன மாளிகைக் கூட்டத்திற்கு விரோதமாய்ச் சரியான அத்தாட்சிகளைக் கண்டு பிடித்துவிட்டால்....அங்கிருப்பது ஒரு போக்கிரிக் கூட்டமே—பெரும் போக்கிரிக் கூட்டம்—அதை யொழித்தே தீரவேண்டும்.

அந்த இடம் இந்நகரத்திற்கே ஒரு அகௌரவம். போலீஸார் இதுகாறும் அதைப்பற்றி யொரு உண்மையைக் கூடக் கண்டு பிடிக்கவில்லை. கண்ணம்மாளும் ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை யென்றே நான் நினைக்கிறேன். ஏனம்மா? நீ ஏதேனும் கண்டு பிடித்தாயா?' என்றார். கண்ணம்மாள் "நான் கண்டு பிடிக்கவில்லைதான்" என்றாள்.

கருணாகரம் பிள்ளை, "சாதாரணமாய் அவர்கள்மேல் எதையேனும் ருசுப்படுத்துவது அசாத்தியமாகவே யிருக்கிறது. அவர்கள் பகிரங்கமாய் நம்மோடு பந்தயம் போடுகிறார்கள். இதை யிப்படி விட்டுவிடக்கூடாது. இது நமது வேலைகளுக் கெல்லாம் அகௌரவத்தை யுண்டாக்கிவிடுகிறது. அந்த ஒரு இடத்தை யொழித்துவிட்டால் இந்நகரிலுள்ள மற்ற போக்கிரிக் கூட்டங்களை யெல்லாம் சுலபத்தில் அடக்கிவிடலாம். இப்போது நாம் அவர்களை யொழிக்க வேண்டின் பூரணமான ருசு வேண்டும். ஆனவரையில் இம் முழு விவகாரமும் அந்த இரத்னுபாய் காணமற் போயிருப்பதைப் பொருந்தியதா யிருப்பது மிக்க நலமாயிற்று. அச் சின்ன மாளிகை யாட்கள் சட்டப்படி தண்டனை யடையும் வண்ணம் செய்ய வேண்டும். என்னை யிந்த வேலையில் வைத்திருப்பது அதற்காகவே. கிருஷ்ணராவ்! அக்கள்ளப் பயல்களை யத்தாட்சிகளோடு பிடிக்க ஏதேனும் ஒருவழி யிருக்கவேண்டு மல்லவா?" என்றார்.

கிருஷ்ணராவ் "அவர்கள் சாதாரணக் கள்ளரல்லவென்பது தங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றான்.

கருணாகரம் பிள்ளை :—"ஆம் ஆம் அது எனக்குத் தெரியும். ஆயினும் நீ, கண்ணம்மாள், ஜெகநாதம் ஆகிய மூவரும் சேர்ந்து ஏதேனும் ஒரு மார்க்கம் கண்டு பிடிப்பீர்கள்" என்றார்.

கண்ணம்மாள்:—“உம்முடைய ரூதாடிகளும், போக்கிரி களும் அவர்களை யெச்சரிக்கை செய்து விட்டார்கள். அவர்கள் புது நெருப்புக் குச்சிகளாய் விட்டார்கள்.” என்றாள்.

கருணாகரம் பிள்ளை:—“நீங்கள் புதுத் தீக்குச்சிகள் தானே. நீங்கள் ஆலோசனை கேட்கிறீர்கள். ஏன் கள்ள டெலிபோனில் ஒருகை பார்க்கலாகாது. அவ்வழி யாய் அக்கறுப்புப் புத்தகத்தைக் கண்டு பிடிக்கலாமே” என்றார்.

கிருஷ்ணாராவ் தலையசைத்து, “கள்ள டெலிபோன் துர்க்கையனுக்குத் தெரிந்தபடி இருக்கவே யிருக்கிறது. அது மறுபடி வேலை செய்யலாம். ஆனால் நிச்சயமல்ல. அத்தகைய சந்தேகமான வழிகளில் நான் பிரவேசிக்க மாட்டேன். இக்கள்ளர்கள் இப்போது அனேக விஷயங் களைக் கற்றுக்கொண் டிருக்கிறார்கள். இல்லையில்லை. புது வழிகளால்தான் இவர்களைப் பிடிக்கவேண்டும். இவர்கள் விஷயத்தில் மிக்க ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண் டும்” என்றான்.

கருணாகரம் பிள்ளை :—“அந்த இடங்களுக்குச் செல்லும் அதிகாரமுடைய ஆசாமிகளெல்லாம் நல்ல பணம் சம்பாதிக்கிறார்கள். யாரும் அவர்கள் விஷயத்தில் பிரவேசிக்கிற தில்லை. போலீஸார் அத்தகைய இடங் களிலெல்லாம் பணம் வாங்கிக் கொள்கிறார்கள் என்று நம்பத்தக்க ஆசாமிகள் கூறி யிருக்கிறார்கள். ஆனால் அதை ருசுப்படுத்த முடியாது என்பது எனக் குத் தெரியும். யார் அதை வாங்குகிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியாது. ஆனால் வாரத்திற்கொரு முறை ஒரு ஆள் சென்று அந்தந்த விடத்தில் பணத் தை வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறான். அது அந்

தந்த விடத்திலுள்ள முதலாளிகள் மூலமாகவே நடக்கிறது. வேறு யாருக்கும் தெரியாது. ஆ! நற்காலமாய் இந்தத்தினந்தான் அவர்கள் பணம் தண்டும் தினம். நீ கள்ள டெலிபோன் விஷயமாய்க் கூறிய சங்கதி சரிதானே?" என்றார்.

கிருஷ்ணராவ் ஆத்திரத்தோடு "அத்தினம் இன்றுதானா? உண்மைதானா?" என்றான்.

கருணாகரம் பிள்ளை :—ஆம். அப்படித்தான் எனக்குத் தெரிந்திருக்கிறது.

கிருஷ்ணராவ்:—" அப்படியாயின் அவர்கள் இதுகாறும் அறியாத ஒரு எந்திரத்தால் நான் வேலை செய்கிறேன்" என்று உடனே எழுந்து டெலிபோனருகிற் சென்று சின்ன மாளிகையைக் கூப்பிட்டு அதிலுள்ள வேலை யாட்களின் மேஸ்திரியாகிய ஜம்புசாமி என்பவனைக் கூப்பிட்டான். ஜம்புசாமி ஏன் என்றதும், "ஜம்புசாமி! வந்தனம்-மூன்று பேருக்கு போஜனம் செய்ய ஒரு இரகசிய அறை வேண்டும்." என்றான்.

அவன்:—"இல்லை" என்றான்.

கிருஷ்ணராவ்:—" இரண்டறைக ளிருக்கின்றன வல்லவா-மற்றொரு அறையை ஏற்பாடு செய்யக்கூடுமல்லவா?" என்றான்

பிறகு கிருஷ்ணராவின்முகத்தில் உண்டான சந்தோஷக்குறியால் காரியம் நிறைவேறிற்றென்று தெரிந்தது. அவன் " ஜம்புசாமி ! வந்தனம் " என்றான்.

ஜெகநாதன்:—என்ன சங்கதி என்று கேட்டான். கிருஷ்ணராவ், " தண்டல் தண்டும் ஆசாமிகள் எங்கு போய்த் தண்டுவார்கள். வெளிக்குப் பார்த்தால் பகிரங்கமான விடமாக விருக்க வேண்டும். ஆனால் அங்கு இரகசியமான இடமும் இருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட விடங்களில் சின்னமாளிகை முதல் தரமானது. அங்கு இரண்டு இரகசிய போசன அறைகள் இருக்கின்றன. அதன்மேல் அங்குள்ள வேலையாட்களின் தலைவனும் காரியஸ்தனுமாகிய ஜம்புசாமியைக் கூப்பிட்டுக் கேட்டேன். அவன் முதலில் "இன்று இங்கு இடம் கஷ்டம்" என்றான். இதனால் கருணாகரம்பிள்ளை கூறியபடி இன்றுதான் தண்டல் நாள் என்றும் அந்தவிடத்தில் தான் விவகாரம் நடக்கிற தென்றும் நிச்சயமாய்த் தெரிந்தது. அங்கு இரண்டு அறைகளிருப்பது எனக்குத்தெரியும். எனக்குத் தெரியுமென்று ஜம்புசாமிக்கும் தெரியும். ஆகையால் நான் இன்னொரு அறையிருக்கிறதே யதைக் கொடு என்றதே அவன் மறுத்துக்கூற மார்க்கமில்லை. இப்போது அந்த இரண்டாவது இரகசியபோசன அறை நமக்காக அமர்த்தப்பட் டிருக்கிறது. நாம் சீக்கிரம் போகவேண்டும்" என்றான்.

கருணாகரம்பிள்ளை சந்தோஷத்தோடு "இது, நீங்கள் செய்த ஆலோசனை ஜெயமடையத்தக்க வழியாகவே புலப்படுகிறது. ஆயினும் ஒன்றுமட்டும் கூறுகிறேன். அவர்கள் அசாத்தியமான ஆசாமிகள். மிக்க கெட்டிக்காரரான வக்கீல்களை யமர்த்திக் கொள்வார்கள். எந்த விதத்திலேனும் உங்கள் சாட்சியங்களைப் பொய்ப்படுத்த எத்தகைய காரியங்களையும் செய்யத் துணிவார்கள். ஆகையால் அவர்கள் மேல் முதல்தரமான ருசுவுகள் இருக்கவேண்டும்" என்றார்.

கிருஷ்ணராவ் "இவ்விஷயத்தில் என்னைப் பூரணமாய் நம்பும். கண்ணம்மா ! நீயும் என்னோடும் ஜெகநாதனோடும் இராப் போஜனத்திற்கு வருவா யல்லவா ?" என்றான்.

கண்ணம்மாள் "ஆகா! நான் கட்டாயம் வருகிறேன். ஆயத்தமா யிருக்கிறேன்" என்றாள்.

கிருஷ்ணராவ் தன்கடிகாரத்தை யெடுத்துப்பார்த்து, "போதுமானவேளை யிருக்கிறது. நாம் உடனே ஒரு வண்டியிலேறிப் புறப்பட்டால், நமது இரசாயன சாலைக்குச் சென்று சின்னமாளிகைக்குச் சரியான வேளைக்குச் செல்லலாம்" என்றான்.

அவ்வாறே மூவரும் உடனே புறப்பட்டுக் கிருஷ்ணராவின் இரசாயனசாலைக்குச் சென்றார்கள். அங்குச் சென்றதும் கிருஷ்ணராவ் தன் பெட்டிகளில் ஒன்றைத்திறந்து அதிலிருந்த நீளமான ஒரு மெல்லிய குழாயை யெடுத்துத் தன் உட்சட்டையில் வைத்துக்கொண்டான். அதன் பிறகு இன்னொரு பெட்டியைத்திறந்து ஒருவித எந்திரத்தின் பல பாகங்களாகிய துண்டுகளை யெடுத்துத் தன் ஜேபிகளில் வைத்துக்கொண்டு ஜெகநாதனை நோக்கி,

"நண்பனே! நானே யாவற்றையும் வைத்துக்கொண்டால் ஒரு கருப்பஸ்திரீபோல் தோன்றுவேன். நீயும் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறாயா?" என்றான்.

ஜெகநாதன், "ஆகா. இதற்கு என்னைக் கேட்பானேன்?" என்று கூறித் தானும் தன் ஜேபிகளில் சில துண்டுகளை வைத்துக் கொண்டான்.

கிருஷ்ணராவின் செய்கைகள் கண்ணம்மாளுக்கு மிக்க வியப்பை யளித்தன. அவள் ஆச்சரியமான முகத்தோடு யாவற்றையும் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அவளுக்காவது ஜெகநாதனுக்காவது கிருஷ்ணராவ் துண்டு துண்டாய் எடுத்துக்கொண்டு வரும் சாமான் இன்னதென்று சற்றுமே புலப்பட வில்லை. ஆனால் ஜெகநாதன் மட்டும் இத்துண்டுகளெல்லாம் கிருஷ்ணராவ் புதிதாய்க் கண்டுபிடித்த ஏதோவொரு எந்திரத்தின் பாகமாயிருக்க

வேண்டுமென்பதையும், அங்குச்சென்று இவற்றை யொன்ருகப் பிணைத்து எந்திரமாக்கி இதைக்கொண்டு அங்கு நடக்கும் சங்கதியை யுளவறியப்போகிருன் என்பதையும் தெரிந்து கொண்டான்.

கால்மணி நேரத்திற்குள் மூவரும் ஒரு வண்டியி லேறிக்கொண்டு சின்ன மாளிகைக்குச் சென்ருர்கள்.

---

## 12-வது அத்தியாயம்.

இவர்கள் முன்பு சின்ன மாளிகைக்குச் சென்றிருந்த போது தாராளமாய்ப் பணத்தைச் செலவு செய்த தாலும் வேலையாட்களிடம் அன்போடு பேசியதாலும் இப் போது அங்குள்ளவர்களால் மிக்க மரியாதையோடு வர வேற்கப்பட்டார்கள். இவர்கள் உள்ளே செல்லும்போது காரியாலயத்தின் வழி செல்லாமல் தாழ்வார வழியாகச் சென்ருர்கள். ஏனெனில் அங்கு இருக்கும் டெலிபோனில் வேலை செய்யும் பெண், கண்ணம்மாள் டாக்டர் வீரப்பன் வீட்டிற்குச் சென்று கடிதத்தைக் களவாடி வந்தபோது அவளை யொருசமயம் அடையாளம் தெரிந்துகொண் டிருக்கலாகும் என்ற சந்தேகத்தால் எதற்கும் ஜாக்கிரதை யாகவே யிருக்கவேண்டி யிருந்தது.

கிருஷ்ணராவ், நாம் இங்கு வழக்கமாய் வருகிறவர் கள்தான் என்று இவர்கள் எண்ணிக்கொள்ள வேண்டு மென்ற நோக்கத்தால் தங்களை யுள்ளே யழைத்துச் செல் லும் வேலைக்காரனை நோக்கி "டாக்டர் வீரப்பன் வந்திருக் கிருரா?" என்ருன். வேலையாள் "இல்லிங்கோ, அவர் சற்று முன்புதான் ஏதோ வேலையாக வெளியிற் சென் ருர்" என்ருன்.

பிறகு இவர்கள் செல்லும்போது கிருஷ்ணராவ் இரக

சிய போஜன அறைகளில் பெரிய அறையைப் பார்த்தான். அதன் கதவு திறந்திருந்தது. உள்ளே யாருமில்லை. அதன் பக்கத்தறைதான் சின்ன போஜன அறை—இவர்கள் அமர்த்திக்கொண்ட அறை. இவர்கள் அதற்குள் போய்ச் சேர்ந்ததும் வேலைக்காரன் கதவை மூடிக்கொண்டு சென்றான்.

கதவு மூடப்பட்டதும் கிருஷ்ணுராவ் தன் ஜேபிகளில் இருந்த சாமான்களை யெடுத்து அங்கிருந்த மேஜையின் பின் மறைவில் வைக்கத் தொடங்கினன். ஜெகநாதனும் தன்னிடமிருந்தவற்றை யெடுத்து வைத்தான். கிருஷ்ணுராவ் அந்த அறைக்கும் பக்கத்திலுள்ள பெரிய இரகசியப் போசன அறைக்கும் இடையிலுள்ள சுவரை நன்றாய் நோக்கினன். அந்த அறையும் பக்கத்தறையைப் போலவே நன்ருக அலங்கரிக்கப்பட் டிருந்தது. ஆனல் அதில் அதிக சாமான்களிருந்தன.

கிருஷ்ணுராவ் இடையிலுள்ள சுவரில் ஒரு இடத்தைத் தொட்டு "இதற்கு நேராக அந்த அறையில் ஒரு சாமானும் இல்லை" என்று கூறிவிட்டு, அந்த விடத்தில் கீழே யுட்கார்ந்து தான் கொண்டுவந்த எந்திரத்தின் துண்டுகளையெல்லாம் ஒன்ருய்ப் பிணைக்கத்தொடங்கினன்.

அந்த வேலை முடிந்தபின் அவன் பக்கத்தறையின் மத்தியில் மேஜை யிருக்கும் இடத்திற்கும் அதன் உயரத்திற்கும் நேரானவிடம் இந்தச் சுவரில் எங்கிருக்கிறதென்று கண்டுபிடித்து அந்த விடத்தில் தன் எந்திரத்தின் உதவியால் சுவரில் கால் அங்குல அகலமுள்ள ஒரு வட்டமான துளையைச் செய்தான். மிக்க ஜாக்கிரதையோடு அச்சுவர் முழுமையும் துளைத்தானபின், தான் கொண்டுவந்த மெல்லிய நீண்ட குழாயைத் துவாரத்தில் சொருகினன்.

அச்சமயம் அறையின் கதவை யாரோ தட்டுவதை யறிந்து சட்டென்றுபோய் உட்கார்ந்து கொண்டான். ஹோட்டல் வேலையாள், கதவு திறக்கப்பட்டதும் உள்ளே வந்து ஆகாரத்தைவைத்துவிட்டு மரியாதையோடு உடனே வெளிச்சென்றான். அதுவரையில் பக்கத்தறையில் ஆள் சந்தடியே யில்லை.

ஜெகநாதன், தன் வியப்பையும் ஆவலையும் இன்னும் அடக்கிக் கொண்டிருக்க முடியாமல் கிருஷ்ணராவை நோக்கி "நீ செய்திருக்கும் விவகாரம் என்ன?" என்றான்.

கிருஷ்ணராவ், "இப்போது நடக்கும் விவகாரத்தில் சம்பாஷணை யொன்றும் நடக்காதென்று எனக்குப் புலப் படுகிறது. ஆகையால் நடப்பதைக் கண்ணால் காண ஏற் பாடு செய்திருக்கிறேன். இந்த எந்திரமும், அக்குழலும் நான் நவீனமாய்க் கண்டுபிடித்தவை. இப்போது நான் சுவரில் வைத்திருக்கும் குழல் வழியாய்ப் பக்கத்தறையில் நடக்கும் எல்லாச் சங்கதிகளையும், அங்கு வந்திருக்கும் ஆட்களையும் நன்றாய்ப் பார்க்கலாம். இப்போது நீ இக் குழாயில் பார்" என்றான்.

ஜெகநாதன் அவ்வாறே போய்ப்பார்த்ததும் சொல் லொணு வியப்படைந்து பிரமித்து விட்டான். "இதென்ன இது? இப் பித்தளைக்குழாய் கால் அங்குல அகலமே யிருக்கும். அதன் முனையிலிருப்பதும் சின்னக் கண்ணாடி. அக்கண்ணாடியில் அந்தப் பெரிய அறை முழுமையும் நன் றாய்த் தெரிவது எனக்கு மிக்க வியப்பா யிருக்கிறது." என்று கூறிவிட்டு "கண்ணம்மா! நீ போய்ப் பார். அது என்னவென்று நினைக்கிறாய் பார்!" என்றான்.

கண்ணம்மாள் போய்ப் பார்த்துவிட்டு வந்து "இது மிக்க வியப்பான விஷயமே. ஆனால் இது புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பார்வை யெந்திரம்-மிக்க அபூர்வ

மானது. நாம் சாதாரணமாய் நமது கண்களால் காணக்கூடியதைவிட இதன் மூலமாய் எதையும் அதிகமாகக் காணலாம் என்பது நன்ருய்த் தெரிகிறது. இதைப்பற்றிய மற்ற விவரம் இதைக் கண்டுபிடித்தவருக்குத்தான் தெரியும்." என்று கிருஷ்ணராவைக் குறிப்பாய் நோக்கினுள்.

கிருஷ்ணராவ் "ஆம். இது ஒருவித பூதக்கண்ணுடியெனலாம். ஆனுல் பூதக்கண்ணுடிபோல் உருவங்களைப் பெரிதாகக் காட்டுவதல்ல. இதிலிருக்கும் மரையைச் சரியாகத் திருப்பினுல் அடுத்த அறையிலிருக்கும் ஆட்களின் முகங்களை யெல்லாம் சரியாய்ப் பார்க்கலாம். இதுமட்டுமல்ல, அந்த அறையில் ஒருவன் மற்ெருருவனிடம் கொடுக்கும் பணம், நோட்டு, உண்டிகள் யாவற்றையும் அருகிலிருந்து பார்ப்பதுபோல் பார்க்கலாம்," என்ருன்.

ஜெகநாதனுக்கு அதைப்பற்றி யுண்டான வியப்பு அடங்கவே யில்லையாதலால் அவன் அடுத்த அறையில் ஒருவரு மில்லாதிருந்தாலும், அதைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். அதையறிந்த கிருஷ்ணராவ் அவனை நோக்கி "உனக்கு இதில் இவ்வளவு விருப்பம் இருக்கிறவரையில் நாம் முறைபோட்டுக்கொண்டு ஆளுக்குச் சற்று நேரம் அந்த அறையைப்பற்றிக் காவலிருப்போம். முதல் முறை யுன்னுடையதாக விருக்கட்டும்" என்ருன். அதன்படி ஜெகநாதன் பார்த்துக்கொண்டே யிருந்தான்.

அதன்பிறகு கண்ணம்மாள் அந்த நகரிலுள்ள துஷ்டக் கூட்டங்களைப் பற்றி அறிந்த விதத்தையும், அக்கூட்டங்களைத் தொலைக்கத் தான்செய்த முயற்சிகளைப்பற்றியும் கூறிக்கொண் டிருந்தாள். "இதற்குமுன் மிக்க இக்கட்டான சந்தர்ப்பங்களிலெல்லாம் நாங்கள் சிக்கிக்கொண்டிருக்கிறேம். எப்படிப்பட்ட சந்தர்ப்பம் என்ருல், அச்சமையம் ஒன்று அவர்களுக்கு இணங்கிவிட்டால் இணங்கி

விட வேண்டும். அல்லது அவர்களோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டும். அது அப்படிச் செய்துகொள்ளத்தக்க சந்தர்ப்பம். அவ்வாறு செய்யாவிட்டால் ஆபத்துண்டாகும். எனினும் அப்படி ஒருதரம் சமாதானம் செய்துகொண்டால் அதோடு நமது பலம் போய்விட்ட மாதிரியே. இதனால் எங்களுடைய ஏற்பாடென்னவெனில் ஒருபோதும் சமாதானம் செய்து கொள்வதே யில்லை. இதனால் சில பலமான விரோதிகள் ஏற்பட்டு விட்டார்கள். ஆயினும் நாம்மட்டும் ஒரே நெறியில் நேர்வழியில் நடந்து கொண்டால் அவர்களிடம் ஒருபோதும் சிக்கமாட்டோம்'' என்றாள்.

அதற்குள் ஜெகநாதன் குழாயைவிட்டு வந்துவிட்டதால் கிருஷ்ணராவ் போய் வேவு பார்த்துக்கொண் டிருந்தான். அவன் திடீலென்று "உஸ், இப்போதுதான் யாரோ அறைக்குள் வந்தார்கள்'' என்றான்.

உடனே இவர்கள் பேசாமல் மௌனமாய் அவனை நோக்கிக்கொண் டிருந்தார்கள். ஜெகநாதன் "வந்தது யார்?'' என்று குசுகுசுவென்று கேட்டான். கிருஷ்ணராவ் "ஒரு ஆடவன்; யாரென்று தெரியவில்லை. முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண் டிருக்கிறான்.......ஆ-ஆனாலும் பார்த்த உருவமாகவே தெரிகிறது. ஓ! திரும்புகிறான். அய்யோ கடவுளே யார் தெரியுமா? ஈட்டித்தானனே'' என்றான். கிருஷ்ணராவும் ஜெகநாதனும், டாக்டர் வீரப்பனைப் பின்பற்றிச் சென்றதையும், அவனும் தானனும் சாதித்ததைப் பற்றியும் கண்ணம்மாளிடம் முன்னமே கூறி யிருக்கிறார்கள். "இப்போது ஈட்டித்தானன் போலீஸாருக்குப் பணம் தண்டும் வேலையிலிருக்கிறானென்று தெரிகிறது. நாம் இதற்குமேல் ஒன்றும் இப்போதறியாவிடினும் யார்மேல் கண்ணோக்கம் வைக்கவேண்டுமென்

பதை யறிந்து கொண்டது முக்கிய விஷயம்" என்றுள் கண்ணம்மாள்.

பிறகு கண்ணம்மாளும் ஜெகநாதனும் குழாய் வழியாய் பக்கத்தறையை நோக்கினார்கள். ஈட்டித்தானன் சாவதானமாய் உட்கார்ந்து சுருட்டுப் பிடிக்க ஆரம்பித்தான். அவன் யாருக்காகவோ காத்துக்கொண் டிருக்கிறுனென்பது தெரிந்தது. பிறகு கிருஷ்ணராவ் பார்க்கத் தொடங்கினன்.

சற்றுநேரங் கழித்து கிருஷ்ணராவ் பக்கத்தறையில் நடக்கும் சங்கதிகளைப் பின்வருமாறு கூறத் தொடங்கினன்:—

"ஆ! யாரோ வருகிறுர்கள். ஓ! இங்குக் காரியாலயத்தில் டெலிபோனில் வேலை செய்யும் அப்பெண்ணே. பேஷ் மிக்க சமார்த்தியமான வேலை. வாய்ப்பேச்சே யில்லை. ஒருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆ அப்பெண் ஜேபியிலிருந்து ஒரு கடித உறையை யெடுத்துத் தானனிடம் கொடுக்கிறுள். அதிலிருப்பது இன்னதென்று அவளுக்குத் தெரியாதென்று நம்புகிறேன். அந்தக் கடித உறையைக் கொடுத்துவிட்டு அதோ போய்விட்டாள்.

ஆ! இப்போது அவன் கடித உறையைப் பிரிக்கிறுன். கடவுளே! நூறு டாலர் நோட்டுகள் பத்து. இது இச்சின்ன மாளிகை யாட்களே கொடுத்த தென்று நினைக்கிறேன். அவன் மறுபடி சுருட்டுப் பிடிக்கிறுன். ஆ! இன்னொரு ஆள். இந்த ஆளும் பெண்ணே. இவளை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அதே சடங்கு. ஆனல் இப்போது இருநூறு டாலர்களே. அதோ அவளும் போகிறுள்" என்று கூறிக் கொண்டே தன் நோட் புத்தகத்தில் அந்த ஸ்திரீயின் அடையாளங்களைக் குறித்துக் கொண்டான். அதை யெழு

திக்கொண்டு நீ வந்து பார்'' என்று கண்ணம்மாளுக்குச் சமிக்கை செய்தான்.

கண்ணம்மாள் இரண்டு நிமிடம் பார்த்துக்கொண்டேயிருந்து ''ஓகோ! இதோ மரகதம் வந்தாள்'' என்றாள். கிருஷ்ணுராவ் ''சரி விட்டுவிடு. என்ன நடக்கிறது நான் பார்க்கிறேன்'' என்றான்.

கண்ணம்மாள் அவ்வாறே விட்டுவிடக் கிருஷ்ணுராவ் பார்த்து ''இவர்களும் பேசவில்லை. இம்முறை மூந்நூறு டாலர்கள். இந்த முறை அவள் செல்லுமட்டும் அவன் காத்திராமல் உடனே உறையைப்பிரித்து உள்ளிருப்பதை யெடுத்துக் கொண்டான். மரகதமும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறாள். நோட்டுகளை யெல்லாம் தன் காற்சட்டையின் உட்பக்கப் பையில் போட்டுக் கொண்டான். நாம் இவன் மேல் ஏவிய கள்ளன் இவனுக்குப் புத்தி கற்பித்துவிட்டான் போலும். ஆ! அவர்கள் கடித உறைகளைக் கொளுத்தி விடுகிறார்கள். அசாத்தியமான ஆசாமிகள். மிக்க சுலபமாய் ஆயிரத்தைந்நூறு டாலர்கள் வருமானம். இவற்றில் எவ்வளவு ஈட்டித்தானன் வாயில் போய்விடுமோ? தானன் தன் விவகாரங்களில் போலீஸாருக்குப் பாகம் கொடுப்பான் என்று நினைக்கிறேன். இவன் அவர்களுக்கு இத்தகைய வேலை செய்கிறவரையில் அவர்களோடு மிக்க சிநேகமாகவே யிருக்கவேண்டும்.

ஆ! மரகதம் போகிறாள். தானனும் புறப்பட ஆயத்தப்படுகிறான். வசூல் வேலை முடிந்துவிட்டது போலும். வழி தாராளமா யிருக்கிறதென்று சமிக்கை காட்டுவதற்கு எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறான். ஆ - சரி அதோ ஹோட்டல் ஆள் ஒருவன் வந்து கைக்காட்டினான். தானன் புறப்பட்டுவிட்டான். இனி நாமும் போசன வேலையை

முடித்துவிடுவோம். எப்படியும் அதற்குப் பணம் கொடுக்க வேண்டும்.'' என்றான்.

இவர்கள் நான்கைந்து நிமிடங்களில் போஜன வேலையை முடித்து விட்டார்கள். கிருஷ்ணாராவ் "தானனைப் பின்பற்றிச் சென்றிருந்தால் நலமாயிருந்திருக்கும். ஆனால் இப்போதே யப்படிச் செய்வதால் ஒரு சமயம் நமது காரியமே கெட்டுப்போய்விடும்.'' என்றான்.

கண்ணம்மாள் "அந்த மரகதம் என்பவள் யார்? இவள் நீக்ரோ சம்பந்த முடையவளா யிருப்பாளென்று நினைக்கிறேன்'' என்றாள்.

கிருஷ்ணாராவ்:—"அப்படியே யிருக்கலாம்; நான் அவளைப் பற்றிய அடையாளங்களை யளிக்கிறேன். உன் ஆட்களில் தக்கவர்களைக் கொண்டு அவள் விஷயங்களை யறிந்துவரச் சொல். அப்போதுதான் அவளைப்பற்றி நாம் எவ்வளவு வரையில் கவனிக்க வேண்டுமென்பது விளங்கும். இனி அப் புதுமாதின் அடையாளங்களைக் குறித்துக்கொண் டிருக்கிறேன். இதோ அக்குறிப்பு. அவளை யெப்படியேனும் கண்டறிய வேண்டும்'' என்று தான் வரைந்து வைத்திருந்ததை யெடுத்துக் கொடுத்தான்.

கண்ணம்மாளும் ஜெகநாதனும் பார்த்தார்கள். அது சற்றும் விளங்கவில்லை. அதில் மூக்கு, செவிகள், உதடுகள், வாய், முகவாய்க்கட்டை இவற்றைப்பற்றிய தகவல்கள் எழுதப்பட்டிருந்தன. கிருஷ்ணாராவ் தன் நண்பர்களுக்கு அத்தகைய தகவல்களைக்கொண்டு ஒரு ஆளைக் கண்டுபிடிப்பது எப்படி யென்பதைப்பற்றி விவரமாய்க் கூறினான். "இது துரைத்தனத் துப்பறியும் இரகசிய இலாகாவில் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட வழி. இதுவரையில் கவனித்த, ஆளின் உயரம், பருமன், முகத்தின் மாதிரி, மயி

ரின் நிறம், கண், முதலிய அடையாளங்களைவிட இக்குறிகளால் ஆளைத் திட்டமாய்க் கண்டுபிடிக்கலாம். பழைய அடையாளங்களை யொரு கெட்டிக்காரனுகிய கள்ளன் சுலபமாய் மாறுவேடத்தால் மாற்றிக்கொண்டு ஏமாற்றிவிடுவான். இந்த நவீனமுறைச் சோதனையில் ஏமாற்ற முடியாது. இப்போது பிரதான நகரங்களி லெல்லாம் இந்த முறைதான் கையாளப்படுகிறது" என்ருன்.

கண்ணம்மாளும் ஜெகநாதனும் அவற்றைக் கேட்டு மிக்க வியப்படைந்து "இவையாவும் உண்மையாயின் மிக்க வியப்பே" என்ருர்கள். கிருஷ்ணுராவ் அதிலிருந்து இரண்டு நகல் எடுத்து ஒன்றைக் கண்ணம்மாளிடம் கொடுத்து, "இதை நீ வைத்துக்கொண்டு உன்னிடம் எத்தகைய ஆசாமிக ளிருந்தாலும் இதன் உதவியைக்கொண்டு அம்மாதைப் பற்றிக் கண்டுபிடிக்க முயற்சிசெய்." என்று கூறிவிட்டு மற்ருென்றை ஜெகநாதனிடம் கொடுத்து "இதோ ஜெகநாதம்! நீ இதை யெடுத்துக்கொண்டுபோய்க் கருணுகரம் பிள்ளையிடம் காட்டிச் சங்கதியைக் கூறு. அவரிடம் நாட்டில் வேலைசெய்யும் துப்பறிபவர்கள் இருக்கிருர்கள்; என்வரையில் நான்போய் நகரத்தில் பார்க்கிறேன். இன்று எனக்கு அதே வேலை." என்ருன்.

அதன் பிறகு இவர்கள் சந்தடிசெய்யாமல் சின்ன மாளிகையை விட்டுப் புறப்பட்டார்கள். அன்று முழுமையும் தங்கள் ஆட்களில் சரியானவர்களைப் பொறுக்கி உளவறிந்துவர ஏற்பாடுசெய்வதில் காலம்சென்றது. கண்ணம்மாள் ஒருபக்கம் சென்று தன் வீட்டிற்குச் சென்றதும் தன் ஆட்களில் நம்பிக்கையான ஆள்களை அந்த வேலைக்கு நியமித்தாள். ஜெகநாதன் கருணுகரம் பிள்ளையிடம் சென்ருன்.

## 13—வது அத்தியாயம்.

இதற்கிடையில் அக்கறுப்புப் புத்தகத்தை யெப்படி யாவது கண்டு பிடிக்கவேண்டு மென்ற முயற்சி ஒருபக்கம் நடந்துகொண் டிருக்கிறது. அழகாம்பாள், காணுமற்போன இரத்னபாயைக் கண்டுபிடிப்பதில் மிக்க சுறுசுறுப்போடு வேலை செய்யத்தொடங்கினுள். ஆயினும் அவள் அனுப்பிய உளவாளிகளில் ஒருவரிட மிருந்தும் திருப்தியான சங்கதி கிடைக்கவில்லை. அழகாம்பாள் போய் இலக்ஷ்மணம் பிள்ளையைக் கண்டாள். அங்கு நடந்த சங்கதியைப்பற்றி, அவள் அவ்வளவாக விவரமாய்க் கூறு விட்டாலும் அவர்களுக்குள்ளிருந்த பிரிவினை யதிகமா யிற்றென்றே தெரிந்தது. கருணுகரம்பிள்ளையே யிதற்கு மூலகாரணம் என்று அவன் சந்தேகப்பட்டான் என்று தெரிந்தது.

அழகாம்பாள் சாமார்த்தியமாய் உபயாம்பாளைக் கண்டு "நீ நடக்கிறவழியில் உனக்கு ஆபத்து நேரிடும்" என்று எச்சரிக்கை செய்தாள். ஆனுல் அந்த எச்சரிக்கை அனுவசியமாகவே யிருந்தது. கள்ள டெலிபோன் சமாசாரத்தைப் பற்றிய விஷயமே அவளுக்கு எச்சரிக்கை யாகப்போதும்.

லாயர் கனகசபை என்பவனைக் கண்டதுமுதல் துர்க்கையனுேடாவது மதுரைநாயகம் பிள்ளையோடாவது இவர்கள் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியவில்லை. கனகசபையும் அவன் கட்சியாரும் மிக்க இரகசியமாய் வேலைசெய்துகொண்டிருந்தார்கள். கருணுகரம் பிள்ளையும் கிருஷ்ணுராவும் கனகசபை தங்களிடம் சிக்கிக்கொண் டிருக்கிற விஷயத்தைப்பற்றி எள்ளளவும் பிரஸ்தாபிக்காமல் இரகசியமாகவே யிருந்தார்கள். ஏனெனில் ஜுரர்

களுக்கு ஒரு சங்கதியும் தெரியாமலிருந்தால் தக்க சமயம் வரும்போது தங்கள் பலத்தைப் பூரணமாய்க்காட்ட அநுகூலமா யிருக்குமென்பது அவர்கள் எண்ணம். அந்தக் காலமும் சிக்கிரமே வந்தது. கடைசியில் ஜட்கா சுப்பனுடைய விசாரணைநாள் வந்துவிட்டது.

விசாரணையினன்று காலை நியாயாதிபதியாகிய பிரேமநாதருடைய நீதிச்சபையில் கருணாகரம் பிள்ளையும் கிருஷ்ணராவும் முன்னடியே சென்றிருந்தார்கள். நியாயாதிபதிகள் பொய்யையும் மெய்யையும், நிரபராதிகளையும் குற்றவாளிகளையும் எவ்வாறு வேறுபிரித் தறிகிறார்கள் என்ற மார்க்கத்தை யறிய விரும்புவோர் பிரதம நீதிச் சபைகளில் விசாரணை நடக்கும்போது போய்ப்பார்த்தால் அறியலாகும். அங்கு பலவிதமான குற்றவாளிகளின் விசாரணைகளையும், நடக்கைகளையும், மெய்யான ருசுவுகளையும், கட்டுக்கதையான பொய்யையும், மற்ற யாவற்றையும் காணலாம். எல்லாவித விபரீத குற்றங்களும் அங்குத் தான் முடிவடைகின்றன.

நீதிச்சபையின் ஓர்பாகத்தில் உயரமும் விசாலமுமான ஒரு பெரிய அறையிருக்கிறது. அது அக்கட்டிடத்தின் தென்கிழக்குப் பாகத்திலிருக்கிறது. அங்குத்தான் ஏராளமான வக்கீல்களும், குற்றவாளிகளின் சாட்சிகள், சுற்றத்தார், நண்பர்கள் முதலியவர்களும் குழுமியிருக்கிறார்கள். அந்த அறையின் மேல்பாதியில் நிறைய வரிசை வரிசையாக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அதன் முன்பக்கம் மூன்றடி யுயரமுள்ள கிராதியிருந்தது. அதன் மறுபக்கம் ஜூரர்கள், லிகிதர், துரைத்தனவக்கீல் இவர்களுக்குத் தனித்தனி பிரத்தியேகமான இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

எல்லாவற்றிற்கும் கடைசியில் ஒரு உயர்ந்தவிடத்தில்

ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நியாயாதிபதி தமது உத்தியோக உடையோடு கம்பீரமா யமர்ந்தார். அவருடைய ஆசனத்தின் பின்னல் பெரிய சாளரங்க ளிருந்தன. அதன் பின்வீதி, வீதியின் மறுபக்கம் ஜில்லாச் சிறைச்சாலையின் இரும்புக்கம்பிகள் நாட்டப்பட்ட பயங்கரமான சாளரங்கள் புலப்படுகின்றன. நியாயாதிபதியின் முன் நிற்கும் குற்றவாளியின் பார்வைக்கு நேராய் அந்தச் சிறைச்சாலை யமைக்கப்பட்டிருக்கிறது. குற்றவாளிகளின் மனதிற்குப் பயந்தோன்றும் வண்ணம், வேண்டுமென்றே அஃதப்படி யமைக்கப்பட்டிருக்கிறது.

அன்று நீதிச்சபையில் மிக்க ஜனக்கூட்ட மிருந்தது. ஏனெனில் போக்கிரிகளுக்கெல்லாம் தலைவனாகிய ஐட்கா சுப்பன், எப்போதும் அகப்படாதவன் அகப்பட்டுக் கொண்டான். அப்படிப்பட்டவன் தண்டிக்கப்பட்டுவிட்டால் பிறகு கள்ளக்கூட்டம் முழுமைக்குமே ஆபத்தாய் விடும். ஆகையால் கள்ளரெல்லாம் நீதிச்சபைக்குப் பல பல மாறுவேடங்களோடு வந்திருந்தார்கள். அவர்களைக் கிருஷ்ணராவும், கண்ணம்மாளும், கருணாகரம்பிள்ளையும் தவிர மற்றபேர் அறிந்துகொள்ளவில்லை.

ஐட்கா சுப்பனுடைய தந்தையும் அங்கு வந்திருந்தான். அவன் உண்மையில் குற்றமற்ற வமிசத்தில் பிறந்தவன். யோக்கியன். அவனுக்குத் தன் புத்திரன்மேல் இத்தகைய குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு விசாரணை நடப்பது பெரிய வியப்பாக விருந்தது. ஆனால் ஐட்கா சுப்பன் முகத்தில் அவன் தந்தையின் முகஜாடை சற்றுமேயில்லை. கனகசபைப்பிள்ளையென்ற வக்கீலுக்குக் கருணாகரம்பிள்ளை தன்மேல் விட எத்தகைய பயங்கரமான பாணத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் என்பது தெரியாது. ஆகையால் அவன் உற்சாகத்தோடேயே யிருந்தான். அன்று பரசு

ராமன் ஹோட்டலில் அவனிடம் ஜூரர்களுக்காகப் பணம் வாங்கிக்கொண்டு போனவன் ஒருபுறம் உட்கார்ந்திருப்ப தைக் கிருஷ்ணராவும் கருணாகரம்பிள்ளை முதலியவர்களும் பார்த்தார்கள். கருணாகரம் பிள்ளையின் வேவு ஆட்கள் அவனைப் பின்பற்றி அவன் விஷயங்களை யெல்லாம் அறிந்து கொண்டதோடு ஜட்கா சுப்பனுக்கு சாட்சி சொல்லவரும் அவன் கூட்டாளிகளை யெல்லாம் அறிந்துவந்து கூறிவிட் டார்கள். ஆகையால் அவர்கள் சாட்சியாய் விசாரிக்கப் படவேண்டுமென்று கனகசபைப் பிள்ளை கூறியபோது, கருணாகரம் பிள்ளை ஒவ்வொருவரைப் பற்றியும் தக்க அயோக்கியதையான காரணங்கூறி அவர்கள் சாட்சியாய் விசாரிக்கப்படலாகாது என்று தடுத்துவிட்டார். அப் போதுதான் கனகசபைப் பிள்ளைக்குக் கொஞ்சம் திகில் விழுந்தது.

ஏனெனில் இவர்களெல்லாம் ஜட்காசுப்பனுடைய நண் பர்களென்றும், அவனுக்காகச் சாட்சிசொல்ல வருபவர்க ளென்றும் கருணாகரம்பிள்ளை எப்படியோ தெரிந்துகொண் டிருக்க வேண்டும் என்பது அவனுக்குப் புலப்பட்டது. அவ்வளவு வேலை செய்திருக்கும்போது இன்னும் எவ் வளவு சங்கதி நடந்திருக்கிறதோ வென்று அவனுக்கு மனக்கலக்க முண்டாய்விட்டது. அதன் பிறகு கருணாகரம் பிள்ளை சில நிமிடங்கள் வரையில் தம்மிடமுள்ள கடிதங் களில் எதையோ தேடுபவர்போல் பார்த்துக் கொண் டிருந்தார்.

கடைசியில் கருணாகரம்பிள்ளை கிருஷ்ணராவ் பரசு ராமன் ஹோட்டலில் கனகசபை ஜூரர்களுக்கு இலஞ்சப் பணம் கொடுத்தபோது பிடித்த புகைப் படத்தைக் கையி லெடுத்துக் கொண்டு நேராய்க் கனகசபைப் பிள்ளையி னருகிற்சென்று வேறொருவரும் காணாவண்ணம் மிக்க எச்

சரிக்கையோடு, அவன்மட்டும் பார்க்கும்படியாய் அப் படத்தை யவன் முகத்தின் முன் காட்டினர்.

கனகசபைப்பிள்ளை முதலில் அவர் தன்னருகில் வந்த தைக்கண்டு வியப்படைந்து பிறகு அவர் இரகசியமாகக் காட்டுவது என்ன வென்று நோக்கினன். மறுவினடி யதை யுற்றுநோக்கத் தொடங்கினன். அதிலிருப்பதைப் பூரணமாய் அவன் அறிந்து கொண்டான் என்று தமக் குப்புலப்பட்டதே கருணகரம்பிள்ளை யதைத் தமது ஜேபி யில் மறைத்து வைத்துக்கொண்டு ஒரு விசேஷமும் நடை பெருததுபோல் தமது ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

துரைத்தன வக்கீல்-குற்றவாளியைத் தண்டனை யடை யச்செய்ய வாதாடுபவர்-வலியப்போய் குற்றவாளியின் வக் கீலிடம் ஏதோ கடிதத்தைக் காட்டுவது அபூர்வ சம்பவ மானதால் யாவரும் அதைக் கவனித்தார்கள். முக்கியமாய் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களும் குற்றவாளி யும் நன்ருகக் கவனித்தார்கள். கருணகரம்பிள்ளை தன் னிடம் அப்படத்தைக் காட்டியபோது கனகசபைப்பிள்ளை பேரிடி விழுந்தவன்போ லாய்விட்டான். பேச அவனுக்கு நாவெழவில்லை. அவன் முகம் சவம்போல் வெளுத்து விட் டது. அவன் கட்சியைச் சேர்ந்தவர்க ளெல்லாம் அதைக் கண்டு பிரமிப்பும் கலவரமு மடைந்தார்கள்.

நடந்த சங்கதி யின்னதென்று கருணகரம் பிள்ளை கிருஷ்ணராவ் கண்ணம்மாள் ஜெகநாதன் இவர்களுக்கு மட்டுமே தெரியும். வேறெவருக்கும் தெரியாது. ஜெகநா தன் "அவன் இதைப்பற்றி யொன்றுமே பேச மாட்டா னே?" என்ருன்.

கிருஷ்ணராவ்:—"அது பின்னுற்ருன் தெரியும். நடந்தது இன்னதென்று நம்மைத்தவிர ஒருவரு மறியாவிடி

னும், கருணாகரம் பிள்ளை ஒரு பெரிய பயங்கரமான வெடிகுண்டைப் போட்டு விட்டார். அது எதிரிகளின் அரண்களையெல்லாம் அழித்துவிட்டது என்றவரையில் நிச்சயம்.'' என்றான்.

கள்ளக்கூட்டம் முழுமையும் பெரிய மலைபோல் நம்பிக்கொண்டிருந்த வக்கீல் கனகசபைப் பிள்ளையின் நரம்புகளெல்லாம் தளர்ந்து விலவிலத்து விட்டன. கருணாகரம் பிள்ளை வேண்டுமென்றே முன் யோசனையோடு அந்தச் சமயத்தில் அவ்வாறு செய்தார். ஏனெனில் கனகசபைப் பிள்ளை மிக்க தந்திர சாமர்த்திய முடையவன். அவனுக்கு மட்டும் அந்தப் புகைப்படத்தின் சங்கதி கொஞ்சம் முன்னாடித் தெரிந்திருந்தால் அவன் அதற்குத்தக்க ஏற்பாடுகள் எவையேனும் செய்து இதுவரையில் அதைப் பொய்ப்படுத்த வழிதேடித் தைரியத்தோடு பேசும் நிலைமைக்கு வந்துவிட் டிருப்பான்.

இப்போதோ ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்று கருணாகரம் பிள்ளை, அந்த ஹோட்டலுக்கு வந்தபோது செய்த காரியம் இதுதான் என்றமட்டில் அவனுக்கு அப்போதுதான் விளங்கியது. தன் வேலையை வேறொரு வக்கீலிடம் கொடுத்துவிட்டுத் தான் வெளியிலிருந்து வேலை செய்ய அது சமயமல்ல. அப்போது அவகாசமு மில்லை. அவன் என்ன செய்வான்? தான் தயார் செய்த சாமார்த்தியமான சாட்சிகள் ஒவ்வொன்றையும் கருணாகரம்பிள்ளை விசாரிக்கப்பட வொட்டாமற் செய்துவிட்டார். கடைசியில் தனக்கே பெருங் கெடுதியை யுண்டாக்கத்தக்க அத்தாட்சியைத் தன்னிடம் நேரில் கொண்டுவந்து காட்டிவிட்டார். கனகசபைப் பிள்ளையின் சுபாவமே மாறிவிட்டது.

அதன்பின் நியாயாதிபதியாகிய பிரேமநாதர், கனக

சபைப்பிள்ளையின் கட்சிக்கு விரோதமாய் இன்னொரு வெடிகுண் டெறிந்துவிட்டார். அதாவது தமக்குள்ள அதிகாரத்தால் உத்தேசிக்கப்பட்ட ஆசாமிகளே ஜூரர்களாக அமர்வார்கள் என்ற நம்பிக்கை வேண்டாமென்று கூறுவதுபோல் "ஜூரர்கள் யார் என்பது விசாரணையின் முடிவில்தான் வெளியிடப்படும்" என்று கூறினர்.

இவ்வாறு நடப்பது அசாதாரணமே. பிரேமநாதர், தன் கூட்டத்திற்கு விரோதியென்று கனகசபைப்பிள்ளையறிவான். ஆகையால் அவர் கூறியதைக் கேட்டதே அவனுக்குப் பின்னும் திகிலாய்விட்டது.

பிறகு முடிவான விசாரணை தொடங்கியது. கருணகரம்பிள்ளை கற்பனைச் சாட்சிகள் வரவொட்டாமலும், சாட்சிகளைப் பயமுறுத்தல், அல்லது இலஞ்சம் கொடுத்து வசப்படுத்தல் முதலிய எந்தக்காரியமும் நடக்கவொட்டாமலும் மிக்க ஜாக்கிரதையெடுத்துக் கொண்டார். சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் தாம் எழுந்து நின்று ஜட்காசுப்பன் மேல் சாட்டப்பட்ட குற்றங்களைத் தெளிவாய், நியாயாதிபதிக்கும் ஜூரர்களுக்கும் மனதில் அவை உண்மையென்று நன்றாய் உறுத்துமாறு எடுத்துக் கூறினர்.

அதாவது "மந்திராலோசனைச் சபைக்கு அவயவிகளாக வரும் அபேக்ஷகர்களில் தனக்குத் தக்க கூலிகொடுப்போர்க்கு இவன் மிக்க அக்கிரமமான வழிகளில் உதவிசெய்வது வழக்கம். இதற்காக ஒரு கூட்டமான துஷ்டர்களையும், போக்கிரிகளையும் தன்னிடம் வைத்துக்கொண்டு வாக்களிப்போர்க்கு இலஞ்சம் கொடுப்பது, அல்லது தான் கூறுகிறவர்களுக்கு வாக்களிக்கா விட்டால் அவர்களுக்குத் தீங்குசெய்து அவர்களைப் பயமுறுத்தல், இறந்தவர்கள் வாக்களித்ததாக பொய்க் கையொப்பங்களிட்டும், மற்ற அபேக்ஷகர்களுக்கு யாரும் வாக்களிக்காதபடிசெய்ப

186530

எத்தகைய அக்கிரமங்களையும் அஞ்சாமல் செய்தல்........ ஆகிய குற்றங்களைச் செய்திருக்கிறான்'' என்று நிரூபித்தார்.

ஆனால் துர்க்கையன், மதுரை நாயகம் முதலிய ஒருவர் பெயரையும் பிரஸ்தாபிக்காமல் மிக்க தந்திர சாமார்த்தியமாய்த் தமது குற்றச் சாட்டை நிரூபித்தார். கனகசபைப்பிள்ளை யிடையிடையில் ஒவ்வொன்றை யாட்சேபிக்க முயல்பவன்போல் காணப்பட்டான். ஆனால் அவனை யெழுந்திருக்க வொட்டாது யாரோ பின்னாலிருந்து இழுப்பதுபோல் தோன்றியது. அவன் பழைய கனகசபைப் பிள்ளையாயில்லை. அவன் துணிகரம், தைரியம் எல்லாம் எங்கோ பறந்து போய்விட்டன.

அவன் நிலைமையைக் கண்டு அங்கிருந்த ஜனங்கள் குசு குசு வென்று வியப்போடு "கனகசபைப் பிள்ளைக்கு இன்றைக்கென்ன? தேக அசௌக்கியமோ? என்ன சங்கதி? கருணாகரம்பிள்ளை என்னவோ ஒருகடிதத்தை-அதுவும் ஒரு சிறுகடிதம் - அதைக் காட்டிவிட்டுப் போனது முதல் அவன்பாடு சோர்ந்துவிட்டதே, அதென்ன சங்கதி? இதில் என்னவோ மர்மம் இருக்கவேண்டும்...." என்று பேசிக்கொண்டார்கள்.

கருணாகரம் பிள்ளையின் பேச்சு முடிந்ததும் கனகசபைப்பிள்ளை யெழுந்தான். அவன் தன்னால் கூடியவரையில் தான் தைரியத்தோடும் உற்சாகத்தோடும் பேசுபவன் போலவே அபிநயிக்க முயன்றான். தான் ஆக்ஷேபிக்க வேண்டிய விஷயங்களைக் கூற முயன்றான். ஆயினும் முன்போல் தைரியத்தோடு எதிர்த்துப் பேசமுடியவில்லை. ஜட்காசுப்பனே அவன் நிலைமையைக் கண்டு கோபத்தால் முகங்கறுத்து வெறுப்போடு அவனை நோக்கினான். கள்ளக் கூட்டத்தார் மனமுடைந்து பேரிடி விழுந்தவர்களானார்கள். ஏனெனில் மிக்க தந்திர சாமர்த்திய

முடையவனும் மேல் அந்தஸ்தி லிருப்போருடைய உதவி யைப் பெற்றிருப்பவனும் தங்கள் தலைவனுமாகிய ஜட்கா சுப்பனே தண்டிக்கப்படுவதாயின் தங்கள் கதியென்ன? என்று அவர்கள் கலக்கமுற்றவர்களானார்கள்.

நியாயாதிபதியாகிய பிரேமநாதர்கூட கனகசபைப் பிள்ளையின் நடவடிக்கையிலுள்ள மாறுதலைக் கவனித்தார். அவன் இதுகாறும் மிக்க தீரத்தோடும், சாமார்த்தியத் தோடும், தன் கட்சி ஜெயிக்கவேண்டு மென்று மிகத் தந்திரமாய் வாதாடுபவனாதலால் அவன் விஷயத்தில் அவ ருக்கு வெறுப்பிருந்தாலும் மதிப்புமட்டு முண்டு. இப் போது அவன் சோர்வடைந்தவன்போல் வாதாடுவது அவருக்கு மிக்க வியப்பை யுண்டாக்கிற்று.

அவன் அப்படி நடந்துகொள்வதால் ஒரு சமயம் விசாரணையை யொத்தி வைத்துக்கொள்ளும்படி கோரு வானோ வென்று சந்தேகித்து, "மறு குற்றச்சாட்டின் விசாரணை தொடங்கப்படுமுன் இதை முடித்துவிட வேண்டு மென்பது நீதிச்சபையின் நோக்கம். அப்படி யிதில் ஆலசி யம் நேர்ந்தால், இன்னொரு குற்றத்தின் விசாரணை முடிந்த பின் இரவிலாயினும் இதை முடித்தே தீரவேண்டும்" என்று கூறினார். இதனால் மறுபடி ஒத்தி வைக்காமல் இன்றே யிதை முடித்துவிட உத்தேசித்திருக்கிறார் என் பது விளங்கியது.

கனகசபைப் பிள்ளை, எதிர்க்கட்சி வக்கீல் ருசுப்படுத் திய விஷயங்களை யெல்லாம் தான் கண்டித்துக்கூறி அந்த ருசுக்களை யுடைக்க வேண்டியவன். ஆனால் அவ்வாறு ஒரு ருசுவைப்பற்றிக் கண்டித்துப் பேசலாமென்று வாய் திறக்க முயன்றால் அச்சமயம் கருணாகரம் பிள்ளை காட்டிய அந்தப் புகைப்படம் பயங்கரமான எமன்போல் அவன்

கண்முன் நிற்கிறது. அது எத்தகைய வல்லமை யுடைய தென்பது அவனுக்குத்தான் தெரியும். அந்தப் புகைப்பட விஷயம் வெளியாயின் அவனுக்கு மிக்க அவமானம் நேரிடும். அதுமட்டுமல்ல, அவனுடைய வக்கீல் சந்நதே இரத்து செய்யப்படும். அந்தோ! அதுமட்டுமல்ல. அவன் தண்டனை யடையவே நேரிடும். கருணாகரம் பிள்ளையால் தனக்கே யித்தகைய பெரிய ஆபத்து நேர்வதாயிருக்கையில் இந்த ஜட்காசுப்பனைக் கவனிப்பது எப்படி? அவனால் ஆகவேண்டிய தென்ன? தனக்கு நேரிடக்கூடிய ஆபத்து அவன் மனோவல்லமையை விழுங்கிவிட்டது. பிறகு புத்தி சாமார்த்தியம், தந்திரம், தைரியம் யாவும் அடியோடொழிந்தன. என்னமோ அந்த நிலைமையில் தன்னால் கூடியவரையில் ஒருவாறாகத் தன் வாதத்தைச் செய்து முடித்தான்.

கடைசியில் இருகட்சி வக்கீல்களின் வாதமும் முடிந்து இருவரும் ஓய்ந்து உட்கார்ந்து விட்டார்கள். அதன்பிறகு நியாயாதிபதி ஜூரர்களிடம் விஷயத்தைப் பாரபட்சமின்றி எடுத்துக்கூறினார். ஜூரர்கள் ஆலோசனை செய்யச் சென்றதே நீதிச்சபையில் எங்கும் நிச்சந்தடியாயிருந்தது. யாவரும் மிக்க ஆவலோடு ஜூரர்கள் தங்கள் அறையிலிருந்து வருவதை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கள்ளக்கூட்டத்தார் திகிலடைந்துவிட்டார்கள். ஜட்கா சுப்பனுக்குத் தன் வக்கீலின்மேல் வெறுப்பு உண்டாயிற்று. ஜூரர்கள் வெளியில் வந்து நியாயாதிபதியை நோக்கியபடி நின்றதே யிவர் பார்வையும் அவர்கள்மேல் நாட்டப்பட்டது. ஜூரர்களின் தலைவன் எழுந்து நின்றான். ஜனங்களுடைய மனப்பதைப்பு அதிகமாய்விட்டது. எழுந்து நின்றவனும் சட்டென்று ஒருவார்த்தை கூறிவிடாமல்

மிக்க தடுமாற்ற முற்றவன்போல் சற்று நின்றான். குற்றவாளியும் அவன் வக்கீலாகிய கனகசபைப் பிள்ளையும் முகம் வெளுத்துத் திகிலோடு அவனை நோக்கினார்கள். கடைசியில் அவன் பெரிய பாரத்தை யேற்றுக்கொண்டவன்போல்,

"குற்றச்சாட்டில் கூறியபடி இவன் குற்றவாளியே" என்றான்.

உடனே நியாயாதிபதி "குற்றவாளியே! முடிவை யறிந்துகொண்டாயல்லவா. வெள்ளிக்கிழமை யுனக்குத் தண்டனை கூறுவேன்" என்றார்.

மறுவினாடி மூன்று காவலர் ஜட்கா சுப்ப னருகில் வந்து அவனைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார்கள். சுப்பன் இதுகாறும் அகப்படாமல் தப்பித்துக்கொண்டிருந்து இப்போது அகப்பட்டுக்கொண்டது அவனுக்கு அவமானமா யிருந்தது. அவன் வெறுப்போடு தன் வக்கீலை நோக்கிவிட்டு "இது வேண்டுமென்றே யாவரும் சேர்ந்து செய்தது. ஆம்" என்று கூறிக் கொண்டே சென்றான்.

---

## 14-வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் கிருஷ்ணராவின் இரசாயன சாலையில், அவன், ஜெகநாதன், கண்ணம்மாள் ஆகிய மூவரும் கூடி மேல் நடக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கலானார்கள். கிருஷ்ணராவ் "நாம் சரியான வழியில் பிரவேசிப்பதாய்த் தெரிந்தாலும் இரத்னபாயின் சங்கதியைப்பற்றி ஒரு வார்த்தைகூடக் கேள்விப்படவில்லையே. அவளுடைய தாயார், பாபம்! அந்த விசனத்தால் மனமுடைந்து எலும்

புந் தோலுமாய் விட்டாள் என்று கருணாகரம்பிள்ளை யிப்போதுதான் டெலிபோனில் கூறினார்'' என்றான்.

கண்ணம்மாள் ''இப்படி யொரு சங்கதியுந் தெரியாமலிருப்பது மரணத்திற்குச் சமதையா யிருக்கிறது. ஏதேனும் சமாசாரம் அறிந்தேயாகவேண்டும்'' என்றாள்.

கிருஷ்ணராவ் ''அந்தப் பாரத்தை நான் உன் மேலேயே போடவேண்டியவனாக விருக்கிறேனென் றஞ்சுகிறேன். இப்போது டாக்டர் வீரப்பனை விட்டுவிட்டு நமது பார்வையை மரகதத்தின்மேல் வைக்கவேண்டும். வேறு மார்க்கமேயில்லை. நாம் அனுப்பிய அடையாளங்களின் மூலமாய் ஏதேனும் சமாசாரத்தை யறிய இவ்வளவு சீக்கிரமாய் எதிர்பார்க்கலாகாது. டாக்டர் வீரப்பனும், மரகதமும் அந்த மங்கம்மாள் அழகு மாளிகைக்குள் நுழைந்ததை நாம் பார்த்தோம். கண்ணம்மாள்! இப்போது உன் அழகைப்பற்றி நான் கேலியாய்க் கூறுவதாய்க் கருதவேண்டாம். உன் அழகு இயற்கையால் பூரண மடையத்தக்கதேயன்றி எந்த அழகு மாளிகையாலும் அதை யின்னும் அதிகப்படுத்த முடியாது'' என்றான்.

கண்ணம்மாளைவிட வேறு எந்தப் பெண்ணாகவாவது இருந்தால் அவன் கூறிய வார்த்தைகளைப் பலவிதமாய் அர்த்தம் செய்துகொள்வாள். கிருஷ்ணராவ் தவிர வேறெந்த மனிதனாகவாவதிருந்தால் ''நாம் இப்படிக்கூறினால் பலவிதமாக அர்த்தம் செய்து கொள்வார்கள்'' என்றே கருதுவான்.

ஆனால் இவர்கள் இருவரும் மிக்க சூக்கும புத்தியுடையவர்கள். சுலபமாய் எதிரியின் உள்ளக்கருத்தை யுணர்ந்துகொள்ளும் ஆற்றல் வாய்ந்தோர். ஜெகநாதனுக் கென்னமோ கிருஷ்ணராவ் கூறியதன் அந்தரங்கக் கருத்து சற்

றும் விளங்கவில்லை. ஆனால் அவன் களங்கமின்றியே கூறினன் என்று மட்டும் எண்ணிக் கொண்டான்.

கண்ணம்மாளோ கிருஷ்ணராவை நோக்கி, "அப்படியாயின், செயற்கை யழகை நான் முயன்றுபார்க்க வேண்டுமென்பது உன் கருத்து. அப்படித்தானே?" என்றாள்.

கிருஷ்ணராவ்:-"ஆம் ஜெகநாதனுக்கு அதில் விருப்பமில்லை. நான் செல்லலாமெனின் என்னை மன்மதனுக்கி விடயாராலுமே முடியாது. மேலும் அங்கு ஆடவரைச் சேர்ப்பார்களென்று நான் கருதவில்லை. முக்கியமாய் அந்த வுண்மையையும் நீ கண்டறிய வேண்டுமென்பது என் விருப்பம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நான் உன்னைத்தான் நம்பிக்கையாய் இந்த வேலைக்கு அனுப்பலாகும். மற்ற எவரும் அங்கு நடக்கும் இரகசியங்களைக் கண்டறிய வல்லவர்களல்ல. அங்கு வருகிற ஆசாமிகள் யார், எத்தகையோர் என்பவைகளையும், மற்ற விஷயங்களையும் பற்றி எவ்வளவு அறிந்து கொள்ளலாகுமோ அவ்வளவும் அறிந்து கொள். அந்த விடத்தில் முதலாளியா யிருக்கும் மங்கம்மாளைப்பற்றிய விஷயங்களையும் கண்டு பிடித்தாயாயின் அவ்வளவும் நலமே" என்றான்.

கண்ணம்மாள் "என்னால் கூடியதைப் பார்க்கிறேன்" என்றாள். சற்று நேரத்திற்குள் கண்ணம்மாள் அங்கிருந்து புறப்பட்டு விட்டாள். அதன் பிறகு கிருஷ்ணராவ், டாக்டர் வீரப்பன் ஈட்டித்தானனிடம் கொடுத்த ஔஷதப் பொட்டணங்களைச் சோதனை செய்யத் தொடங்கினன். ஜெகநாதன் அவன் ஜோலிக்குப் போகாமல் பேசாமல் வாசித்துக் கொண்டிருந்தான்.

ஆயினும் இருவரும் கண்ணம்மாள், அழகு மாளி

கைக்குச் சென்றவள், என்ன சங்கதி கொண்டு வருகிருளோ என்ற மனக்கவலையோடேயே யிருந்தார்கள்.

கடைசியில் மாலை நெடுநேரமானபின் ஒரு வண்டி வந்து வீட்டின்முன் நின்றதும் கண்ணம்மாள் அதினின்று மிறங்கி உள்ளே வந்தாள். கிருஷ்ணுராவ் மிக்க ஆவலோடு "எப்படியிருந்தது அதிஷ்டம். உனக்குப் பூர்ண அழகுண்டாய்விட்டதாக நீ திருப்தி யடைந்தாயா?" என்று வினவினன்.

கண்ணம்மாள் "எனக்கு நகை யுண்டாக்கவேண்டாம். என்பாடு போதுமென் ருய்விட்டது. நான் நீராவியில் அவிக்கப்பட்டேன். பனிக்கட்டிபோல் விரைக்கச் செய்யப்பட்டேன். தென்னமரத்தில் கள்ளிறக்குகிறவன் பாளையைத் தட்டுவதுபோல் தட்டப்பட்டேன். பொம்மைக்குச் சாயம் பூசுவதுபோல் பூசப்பட்டேன். அய்யோ கடவுளே" என்ருள்.

கிருஷ்ணுராவ்:—"அய்யோ கடவுளே! உனக்கு அத்தகைய அசாதாரணமான தொந்திரைகளெல்லாம் நேரிடுமென்று நான் கனவிலும் கருதவில்லை. அப்படிக் கொஞ்சம் தெரிந்திருந்தால் நான் உன்னை யனுப்பியே யிருக்க மாட்டேன்...." என்று மனவருத்தத்தோடு கூறினன்.

கண்ணம்மாள்:—"இல்லை யில்லை. அப்படியல்ல. அவைகளெல்லாம் அந்தச் சமயங்களில் சுகமாகவே யிருந்தன. அங்கு நடந்தது என்னவென்று விவரமாய்க் கூறுகிறேன். அப்போதுதான் உங்களுக்குச் சங்கதி விளங்கும்" என்று மங்கம்மாளின் அழகு மாளிகையிலுள்ள விஷயங்களைப் பின் வருமாறு விவரிக்கத் தொடங்கினள்:—

"முதலாவது அங்கு நுழையும்போதே ஒருவித

ஆரோக்கியமான உஷ்ணக் காற்று வீசுகிறது. அதோடு ரோஜா அத்தர்மணம் வீசுகிறது. கீழே அங்கு நடப்பதும் ஆரோக்கியத்தை யளிக்கிறது. ஏனெனில் கீழே இரண்டங்குல உயரமுள்ள மிக்க மிருதுவான இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட் டிருக்கிறது. அங்குள்ள அசையும் நாற்காலிகள், உட்காருகிறவர்களுக்கு ஆரோக்கியமான உறக்கத்தை யுண்டாக்கத் தக்கவை. எல்லாம் வசீகரிக்கத் தக்கவைகளே. கண்ணுக்குக் குளிர்ச்சியை யளிக்கும் வண்ணம் கிளிப்பச்சை நிறமுடைய திரைகள் எங்கும் விடப்பட்டிருக்கின்றன.

அங்குள்ள ஒவ்வொரு அறையின் வாயிற்படியிலும் விலையுயர்ந்த சீனத்தொட்டிகளில் நறுமணம் வீசும் புஷ்பச்செடிகள் வைக்கப்பட் டிருக்கின்றன. அங்கு வரும் மாதர்களின் அழகோடு போட்டி போடத்தக்கவிதமாக அங்குள்ள எல்லா வஸ்துக்களும் அழகாகவே யிருக்கின்றன. உடையணியும் அறைகள் பல விருக்கின்றன. ஒவ்வொரு அறையிலும் ஒரு மஞ்சம், ஒரு நிலைக்கண்ணாடி, சீப்பு, வாசனை யெண்ணெய் யாவும் வைக்கப்பட்டிருக்கின்றன. யாவும் மிக்க மனோரம்மியமாகவே யிருக்கின்றன.

இவைகளையெல்லாம் கடந்து சென்றால் ஒரு அறை யிருக்கிறது. அது நீராவியில் ஸ்நானம் செய்யும் அறை. அங்குச் சென்றதே அங்கு அதற்கென்றிருக்கும் ஆட்கள் வந்தவளை ஆவியில் அவித்துவிடுகிறார்கள். பிறகு அவளை, அடுத்த அறையில் கொண்டுபோய்விடுகிறார்கள். அங்கு இரண்டு குழாய்களி லிருந்துவரும் குளிர்ந்த ஜலம் உஷ்ண ஜலம் இரண்டிலும் மாற்றிமாற்றி அவளைக் குளிக்கவைக்கிறார்கள். அங்கு நடக்கும் விஷயங்கள் ஒவ்வொன்றையும் விவரமாய்க்கூற முயன்றால் பொழுது விடிந்துவிடும். சுருக்கமாய் முடிக்கிறேன்.

பலவித வாசனைகளையும் ஊட்டித் தேகத்தைக் கழுவியபின் கூந்தல் விவகாரம் பெரிய விவகாரமாய் நடக்கிறது. கூந்தல் எவ்விதமான சுருளடைந்திருக்க வேண்டுமோ அதததற்குத் தகுந்தமாதிரி கருவிக ளிருக்கின்றன. அதததற்குத் தக்கப்படி வேலைசெய்வதில் கைதேர்ந்த ஆட்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒவ்வொரு தலைமையாளும் அவர்களுக்குக் கையாட்களுமிருக்கிறார்கள். எல்லாம் சாத்திர ஆராய்ச்சியின்படி நடைபெறுகின்றன. கூந்தலுக்கு வேண்டிய பலவித வாசனையெண்ணெய்கள் இருக்கின்றன. அவற்றை அவரவர் இஷ்டப்படி யுபயோகித்துக்கொள்ளலாம்.

இவையாவும் முடிந்தபின் யாவற்றிலும் முக்கியமான முகவேஷம் இருக்கிறது. அங்கு நான்கைந்துபேர் வேலை செய்கிறார்கள். பலவித வர்ணங்கள், பலவிதக் கருவிகள், எந்திரங்கள் ஆகிய இவற்றைக்கொண்டு அவரவர்க்கு எத்தகைய நிறம்வேண்டுமோ அத்தகைய நிறத்தை முகத்திற்கு அளித்துவிடுகிறார்கள். ஒரு யௌவனப் பெண் போல் தோன்றவேண்டுமானாலுஞ்சரி, நீண்டநாள் வியாதியாயிருந்து இப்போதுதான் சுகப்படுகிறவள்போல் தோன்றவேண்டுமானாலும் சரி, வேறு எப்படி யாக வேண்டுமாயினும் சரி அந்த அந்த உருவங்களை அமைத்து விடுகிறார்கள். உதாரணமாக:—அறுபது வயதுக் கிழவி, அவளுக்கு முன் பற்களெல்லாம் போய்விட்டன; அப்படிப்பட்டவள் இருபத்தைந்து வயது யௌவனமாது போல் தோன்றவேண்டுமாயின் அவளுக்குப் பொய்ப்பல் முதலிய யாவும் வைத்து அவளுடைய நரை திரை யாவும் மாற்றி யௌவன மாதாகத்தோன்றும் வண்ணம் செய்து விடுகிறார்கள்.

ஒரு யௌவனமாது ஏதோ ஒரு காரியார்த்தமாய்க்

கிழவியைப்போல் தோன்றவேண்டுமாயின் பசையாலும் அதற்குத்தக்க கருவிகளாலும் நரை திரைகளை யுண்டாக்கி யதன்மேல் அவசியமான வர்ணம்பூசி இயற்கை யுருவம் போல் செய்துவிடுகிறார்கள். நிறத்திலோ எத்தகைய நிறமாயினும் சரி, நீக்ரோஜாதியார்போல் கறுப்புநிறமோ, ஜப்பான் முதலிய நாட்டார்போல் மஞ்சள் நிறமோ, எந்த நிறமாயினும் சரி, அதோடு அந்தநிறம் சொல்பகாலம் இருக்கவேண்டுமாயினும் சரி, அல்லது சிலநாட்கள் அப்படியே யிருக்கவேண்டுமாயினும் சரி, இரசாயன ஔஷதங்களைக்கொண்டு அப்படி அப்படியே செய்கிறார்கள்" என்றாள்.

இதை வாசிக்கும் நண்பர்களாகிய சகோதர சகோதரிகளுக்கு இக்கதையைத் தொடர்ந்து செல்லுமுன் சில விஷயங்களைக் கூறக்கருதுகிறோம். அவையாவன:—

நாவல் என்றால் கல்பனை யிருக்குமென்பது பெரும்பாலோர் கருத்து. அனேகம் நாவல்களில் அப்படியிருப்பது உண்மையே. ஆனால் அனேகம் நாவல்களில் கதையின் மூலவிஷயம் உண்மையாய் நடந்ததாகவும் சரித்திர சம்பந்தமானதாகவும் இருக்கின்றது. ஆயினும் ஆசாரம் நடவடிக்கைகள் முதலியவைகள் உண்மையாகவே யிருக்கும்.

இப்போது இந்த மங்கம்மாளின் அழகுமாளிகையைப்பற்றிய விஷயங்களில், பெயர் முதலியவை ஒரு சமயம் மாறு பெயர்களாக விருக்கலாம். ஆனால் அத்தகைய இடங்கள் மேல் நாடுகளில் இருப்பதும், அவற்றில் அத்தகைய சங்கதிகள் நடைபெறுவதும் மட்டும் உண்மையே. நாளைக்கும் அவற்றைக் காணலாகும். மாதர்கள், அதிலும் உயர்ந்த அந்தஸ்திலுள்ள செல்வம்பொருந்திய மாதர்கள். அவ்வாறு தங்கள் உருவங்களைச் செயற்கை விஷயங்களால்

அழகுபெறச்செய்து கொள்வதும், கிழவிகள் யௌவன மாதர்போல் செய்து கொள்வதும் இப்போதும் நடைபெறக்காணலாம். மிக்க செல்வமுடையோர் அதற்கு வேண்டிய இரசாயன மருந்துகள், கருவிகள் அந்த வேலையில் தேர்ச்சிபெற்ற ஆட்கள் முதலியயாவும் தங்கள் மாளிகைகளிலேயே யமைத்து வைத்துக்கொண் டிருக்கிறார்கள். செல்வ மில்லாதோர் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் பொது இடத்திற்குச் சென்று அதற்கு வேண்டிய கூலியைக்கொடுத்து அவசியமானபோது தங்கள் வேலையை முடித்துக் கொள்கிறார்கள். இதனால் நாம் அறிந்து கொள்வதென்ன ?

மேல் நாட்டாரின் நோக்க மனைத்தும் இவ்வுலக போகத்தை யெவ்வளவு அதிகமாய் நம்மால் கூடியவரையில் அனுபவிக்கலாமோ அவ்வளவு அனுபவிக்கலாம் என்பதே. "நாம் ஜென்மம் எடுத்தது, பொருளைச் சம்பாதிக்கவும், அதைக்கொண்டு மாதர்போகம் முதல் எல்லா உலக போகங்களையும் கூடியவரையில் அனுபவிப்பதுமே" என்பதே ஆடவர் நோக்கம். "இவ்வுலகத்தில் மாதர்போகமே யுயர்ந்தபோகம், அவர்களின் நன்மதிப்பைப்பெறுவதே ஆண்டவனருள் பெற்றமாதிரி. அவர்கள் பெண் தெய்வமாகும்" என்பதே. ஒருவன், பெண்கள் தன்னைக் கண்டதே மயங்கித் தன் நட்பை விரும்புகிறார்க ளென்று கண்டால் அவன் இவ்வுலகில் தன்னிலும் பாக்கியசாலி யாருமில்லை யென்று கருதிப் பெருமையும் செருக்குமடைவான். அவன் நண்பர்களும் அவனை மிக்க பாக்கியசாலி யென்று கௌரவப் படுத்துவதோடு அவன்மேல் பொறாமையே கொள்வார்கள்.

இன்னும் ஒருவன் பலபெண்கள் தன்மேல் காதல் கொள்ளும்படி அவர்களை மயக்கி வஞ்சித்து அவர்கள்

கற்பை யழித்துவிட்டால் அவன் பெரியவீரனுகப் புகழப் படுவான். அந்தோ! இது மட்டுமல்ல. இதேமாதிரி ஒரு பெண் தன்னைக்காணும் ஆடவரனைவரும் தன்மேல் காதல் கொள்ளுமாறு நடந்துகொண்டாளாயின் மற்ற பெண்களெலலாம் அவள்மேல் பொருமை கொள்வார்கள்.

அவர்கள் கொள்கை யிவ்வாறிருப்பதால் அவர்கள் செய்கை நாட்டம் அனைத்தும் உலகபோகத்தைப் பொருந்தியவைகளாகவே யிருக்கின்றன. இதனுல் ஆன்மார்த்த சிந்தனை அவ்வளவும் குறைந்துபோ யிருக்கிறது. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் கோயிலுக்குப் போய் வந்துவிட்டால் அதோடு பரலோகத்திற்குப் பிரயாணச்சீட்டு கையில் வந்துவிட்டதாக நம்பிக்கொண் டிருக்கிருர்கள். அதைப் பற்றிக்கூடச் சிந்திப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவர் அகப்படுவது கஷ்டம். அவர்கள் மதாசாரம் அத்தகையது. ஏனெனில் அவர்கள் அனுசரிப்பது உலகாயத மதம்.

இப்போது இதைப்பற்றி நாம் ஏன் இவ்வளவு விவரித்துக் கூறுகிறேம் எனின் இத்தகைய மேல் நாட்டு ஆசார ஒழுக்கங்களை நாமும் பின்பற்ற வேண்டு மென்று நம் நாட்டிலுள்ள சில மூடசிகாமணிகள் கருதுகிருர்கள். கருதுவதோடு நிற்காமல் நம் நாகரீகத்தில் சீர்திருத்தம் உண்டாக்குவதாய்க் கூறி, அன்னியர்க்கும் அதைப் போதித்துத் தெலுங்கர் கூறும் பழமொழிப்பட்டி "தான் செடினகோன்தி வனமந்த செடுபிந்தி" என்று அன்னியரையும் கெடுக்க முயல்கிருர்கள்.

மேல் நாட்டாரின் கொள்கைப்படி முன்னும் பின்னும் பிறப்பில்லை. அந்தக் குருட்டு நம்பிக்கையால் சில பத்திலேயே மோட்சம் கிட்டிவிடுமென்று நம்புகிருர்கள். இத்தகைய குருட்டு நம்பிக்கை யுடையோர் ஆசாரங்களைப் பின்பற்றக்கருதும் நம்மவரின் மூடமதியை யென்னென்று

கூறுவது! மேல் நாட்டாரின் துர் ஆசாரங்களால் விளையும் தீங்குகளை விளக்கிக் காட்டுவதே நமது நாவலின் முக்கிய நோக்கம். இதை நம் நாட்டுச் சகோதர சகோதரிகள் நன்கு கவனிக்குமாறு மிகவும் வேண்டிக் கொள்கிறோம். இதை யின்னும் விரிக்கிற் பெருகுமெனக் கருதி யிதோடு நிறுத்திக் கதையைத் தொடங்குவாம்:

கண்ணம்மாள் அந்த அழகுமாளிகையில் நடக்கும் விஷயங்களையெல்லாம் கூறக்கேட்ட கிருஷ்ணராவ் "அங்கு வரும் ஆட்களைப்பற்றி யென்ன கண்டு பிடித்தாய்?" என்று வினவினன்.

கண்ணம்மாள்:—"ஆ! ஆம், அதைப்பற்றிக் கூறவேண்டும். அந்தோ! எவ்வளவோ இருக்கிறது. எங்குத் தொடங்குவதென்று எனக்குப் புலப்படவில்லை. அங்குவரும் ஒரு ஆள் நடக்கும் விசேஷங்களை மற்ற ஆட்களுக்குக் கூறுவதால் பலவிதமான ஆட்களும் அங்கு வருகிறார்கள்," என்றாள்.

கிருஷ்ணராவ்:—"அங்கு யாவும் நேர்மையாய் நடக்கின்றனவா?" என்றான்.

கண்ணம்மாள் :—ஆகா. வெளிக்கு அப்படித்தான் தோன்றுகின்றன. ஆனால் உள்ளே நடப்பது வேறு என்று தெரிகிறது. திருட்டாந்தமாய் எனக்கு மிக்க அதிசயமாய்த் தோன்றிய ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறுகிறேன். என்னுடைய ஸ்நானம் முதலிய விவகாரங்களனைத்தும் முடிந்தபின், நான் ஒரு இடத்தில் இளைப்பாற உட்கார்ந்தேன். அந்தக் கூட்டத்தில் இன்னும் சில மாதர்கள் இருந்தார்கள். ஒரு வேலைக்காரி ஸிகாரெட் கொண்டுவந்து வேண்டியவர்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று காட்டினாள். அவள் கூடவே காபியும் கொண்டு வந்தாள். ஒரு பெண்

காபியோடு கூட போதையை யுண்டாக்கும் ஒரு ஔஷதத்தைச் சேர்த்துக் கொடுக்கும்படி கேட்டாள்.

கிருஷ்ணராவ்:—“ஓகோ! அப்படியாயின் டாக்டர் வீரப்பனுடைய வேலை யங்கு நடக்கிறது” என்றான்.

கண்ணம்மாள் :—“இதில் ஏதோ விசேஷம் இருக்கிறதென்றே நான் கருதினேன். அச்சமயம் பக்கத்தறையில் ஒரு ஆள் பேசும் குரல் கேட்டது. உற்றுக் கேட்டேன். அது டாக்டர் வீரப்பன் குரலே” என்றாள்.

கிருஷ்ணராவ் :—“ஆ! சின்ன மாளிகையிலிருந்து நாம் வெளிவரும்போது ஒரு வேலைக்காரச் சிறுவனைக் கேட்டபோது அவன் ‘டாக்டர் வீரப்பன் நகரமுழுமையும் வர்ணம் தீட்டுகிறார்’ என்று கூறினான். அப்போது எனக்கு அதன் அர்த்தம் இன்னதென விளங்கவில்லை. இப்போது விளங்கிவிட்டது” என்றான்.

கண்ணம்மாள்:—“அவன் உதவியால்தான் அங்குச் சாஸ்திரயுக்தமான விஷயங்களெல்லாம் நடைபெறுகின்றன. அவர்கள் ஒருவர் உருவத்தை யெந்தவிதமாக வேனும் மாற்றுவதாய்ச் சபதம் கூறுகிறார்கள், கண், முகவாய்க்கட்டை, காது முதலிய அவயவங்களைக் கூட மாற்றிவிடுவதாகக் கூறுகிறார்கள். தேகத்தில் இயற்கையா யமைந்துள்ள குறிகளை யெடுத்துவிடுவதாகவும் புதியவற்றை யுண்டாக்குவதாகவும் கூறுகிறார்கள். ஓ! கடவுளே. அவர்கள் கூறுகிறவற்றைக் கேட்டால், எப்படி நம்புவதென்று நமக்கே மிக்க வியப்புண்டாகிறது. இந்த டாக்டர் வீரப்பன்றான் அங்கு மூல உதவியாயிருக்கிறானென்பது தெரிகிறது. அந்த மங்கம்மாள் இருக்கிறவரையில் ஒருவரும் தங்

கள் இயற்கை வனப்பை நம்பியிருப்பதில் பயனில்லை. அங்குத்தான் டாக்டர் வீரப்பனுக்கு மூல வருமானம் கிடைக்கிறதென்று நான் நினைக்கிறேன்'' என்றாள்.

கிருஷ்ணராவ்:—"மங்கம்மாளை நீ பார்த்தாயோ?" என்று வினவினன்.

கண்ணம்மாள்:-"இல்லை. என்றால் கூடியவரையில் விசாரித்துப் பார்த்தேன். கடைசியில் ஒரு பெண் மூலமாய் விசாரித்ததில் மங்கம்மாள் அச்சமயம் வெளியில் எங்கோ சென்றிருப்பதாகத் தெரிந்தது. இன்னொரு விஷயம்: டாக்டர் வீரப்பன் யாரோடோ பேசிக் கொண்டிருந்தான் என்று கூறினேனல்லவா? அது யாரோடு தெரியுமா? மரகதம் என்பவளோடேயே. ஒரு அறையில் அவர்கள் இருவரும் பேசிக்கொண் டிருந்தார்கள். அவள் அப்போது ஏதோ வேட மணிந்துகொண்டிருந்தாக என்றே நான் நினைக் கிறேன். அன்று நாம் பார்த்தபோதும் அவள் எத் தகைய செயற்கை யழகு செய்துகொண்டிருந்தாள் என்பது நினைப்பிருக்கிற தல்லவா?'' என்றாள்.

கிருஷ்ணராவ் :—" நீ யங்கு வேறு யாரையேனும் கண் டாயோ?'' என்றான்.

கண்ணம்மாள்:—"அந்த விடத்திற்கும் சின்ன மாளிகைக் கும் இடையில் இரண்டே வீடுகளிருக்கின்றன என்ற சங்கதி தெரியுமல்லவா! இந்த இரண்டிடங்களுக்கும் ஒருவிதமான சம்பந்தம் இருக்கிறதென்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. கட்டாயமாய் இருக்கவேண்டு மென்றே தெரிகிறது. எவ்வாறெனின், நான் அங்குச் சென்ற சற்று நேரத்திற்குள் ஒரு பெண் வந்தாள். அவள் ஆகாயத்திலிருந்து குதித்தவள்போல் தோன் றினாள். அவள் யார் தெரியுமோ? ஈட்டித்தானனுக்

குப் பணம் கொடுத்தாள் பார், அதே ஆசாமி. நம்மில் ஒருவர்க்கும் யார் என்று தெரியவில்லையே, அந்த ஆசாமியே. அந்தச் சின்ன மாளிகைக்கும் இதற்கும் எவ்விதமாகவோ ஒருவித சம்பந்தமிருக்கிறது'' என்ருள்.

கிருஷ்ணராவ்:—“பேஷ், இன்று நீ மிக்க நேர்த்தியான வேலை செய்தாய்'' என்று கண்ணம்மாளுக்கு உற்சாகமுண்டாகுமாறு அவளைப் புகழ்ந்து கூறினான்.

கண்ணம்மாள்:—“நான் புகழ்ச்சிக்குரிய காரியம் ஒன்றும் செய்துவிட வில்லை. இப்போதுதான் என் வேலையாரம்பமாயிற்றே யொழிய வேறில்லை. மங்கம்மாளின் அழகு மாளிகையில் கண்டுபிடிக்க வேண்டிய விஷயங்கள் அனேகம் இருக்கின்றன. இன்று நான் முற்பகலில் அங்குச் சென்றேன். இன்னொரு முறை பிற்பகல் நேரமான வேளையில் செல்லவேண்டும். அப்போதுதான் உண்மையான விஷயங்களைக் காணலாகும். இரகசியமாக அங்கு வருகிறவர்களெல்லாம் அச்சமயத்தில்தான் வருவார்கள்'' என்ருள்.

கிருஷ்ணராவ்:—“டாக்டர் வீரப்பனுக்கு அங்கு நல்ல வருமானமென்று நான் நினைக்கிறேன். மாதர்களுக்கு அழகளிக்கும் வேலையில் அவன்ருன் உபாத்தியாயர் என்று கருதுகிறேன்'' என்ருன்.

கண்ணம்மாள்:—“ஆம். அந்தவிடத்தில் அவன் நல்ல காசு சம்பாதிக்கிருன்'' என்ருள்.

கிருஷ்ணராவ்:—“ஆயினும் அங்கு நடப்பது அந்த ஒரு வேலைமட்டுமல்ல. வேறு கள்ளத்தனமான வேலைகளும் நடக்கின்றனவென்று தெரிகின்றன. அப்படிக் கில்லாவிட்டால் அவர்கள் ஈட்டித்தானனுக்குப்

பணம் கொடுக்கவேண்டிய அவசிய மிருந்திராது" என்றான்.

கண்ணம்மாள்:—"ஆ! அது முன்னமே என் புத்திக்குப் புலப்பட்டது. அப்படிக் கில்லாவிடின் அவர்கள் இலஞ்சம் கொடுக்கவேண்டிய காரணமேயில்லை. அந்த ஆசாமிகள் வீணாய்ப்பயந்து அப்படிக் கொடுக்கிற வர்களல்ல. அதனாற்றான் நான் மறுபடி அங்குச் செல்லவேண்டுமென்று விரும்புகிறேன். அங்கிருக்கும் உண்மையை நாம் அறியவேண்டுமாயின் நாம் இரண்டொருமுறை யங்குச் சென்று அவர்களிடம் சாதாரணமாய்ப் பழகிவிடவேண்டும். அதன்பிறகே அவர்களுக்கு நம்மேல் எவ்விதச் சந்தேகமும் தோன்றாது. நாம் சுலபமாய் விஷயங்களை யறியலாகும்." என்றாள்.

கிருஷ்ணாராவ்:—"நீ கூறுவது உண்மையே. யாவும் உண்மையே. உன் சூக்குமபுத்தியைப்பற்றி நான் வியப்புறுகிறேன்" என்றான்.

கண்ணம்மாள்:—"ஆனால் நான் என் சாதாரண உருவத்தோடு அங்குச் செல்லலாகாது. ஆகையால் கொஞ்சகாலத்திற்கு நான் வேடமணிந் திருப்பதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். அவர்கள் எனக்குப் போட்ட வேடத்தோடு நான் சென்றால் தான் அவர்களுக்கு என்மேல் சந்தேக முண்டாகாதபடிச் செய்ய மிக்க அனுகூலமாக விருக்கும்" என்றாள்.

அச்சமயம் டெலிபோனி லிருக்கும் மணி கணகணவென்று அடித்தது. கிருஷ்ணாராவ் துரிதமாய் எழுந்து போய் யார் என்று கேட்டான். கூப்பிட்டது கருணாகரம் பிள்ளை யென்பது தெரிந்தது. இருவரும் சுமார் கால்மணி நேரம் சம்பாஷித்தார்கள். இதில் கருணாகரம் பிள்ளையே அதிகமாகப் பேசியதாகத் தெரிந்தது.

186530
சென்னை-600 008

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல வாசகரும நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திரா.பாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பதின்மூன்று வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 56-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ. ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

**இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு**

1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

Printed at the "Ananda Bodhini" Press, Madras.